வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 117 பக்கங்கள் : 16

## செம்மணி புதைகுழிக்குள் நேற்றும் 2 என்புத் தொகுதிகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், மே. 03

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் ஆறாம் நாளான நேற்று சனிக்கிழமை இரண்டு மனித என்புக் கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்பு கூட்டு தொகுதியில் மூன்று என்பு கூட்டு தொகுதி முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அடையாளம் காணப்பட்ட

15



## தையிட்டி விகாரை காணி விவகாரம்

# "வரைபடம் இல்லை" என்பது பொய்த்தது!

### 1971 ஆம் ஆண்டே அதற்கான வரைபடம் நில அளவை திணைக்களத்திடம் உண்டு

யாழ்ப்பாணம், மே. 03

தையிட்டி பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளைச் சுற்றியுள்ள சர்ச்சை தற்போது புதிய திருப்பத்தை எட்டியுள்ளது.

இதுவரை "அந்தப் பகுதிக்கு உரிய அதிகாரபூர்வ வரைபடம் இல்லை" என்று ஆளும் தரப்பினரும் அரச அதிகாரிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், 1971 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நில அளவைத் திணைக்கள வரைபடம் ஒன்று தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த புதிய தகவல், அரசின் முந்தைய நிலைப்பாடுகள் குறித்து கடுமையான சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இந்த வரைபடத்தின் பிரதி ஒன்றை நில அளவை

15




### புதிய அரசியலமைப்பு, இனப்பிரச்னை தீர்வு

## தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்ட மூன்றாவது சந்திப்பை நடத்த திட்டம்!

கொழும்பு, மே. 03

இனப்பிரச்னைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஆகிய விவகாரங்களில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கிலான மூன்றாவது சந்திப்பை எதிர்வரும் புதன்கிழமை கொழும்பில் நடத்துவதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவை திட்டமிட்டுள்ளது.

இனப்பிரச்னைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஆகிய விவகாரங்களில் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக்

15

## மாலைதீவு ஜனாதிபதி இன்று கொழும்பு வருகை



கொழும்பு, மே. 03

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

இந்த விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட அரசியல் தலைவர்களைச் சந்திக்கிறார்.

15

## பொருளாதார முன்னேற்றத்துக்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டும்!




### சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மே. 03

பொருளாதார மாற்றம், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் எதிர்கால முன்னேற்றத்திற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் முன்னோக்கிக் கொண்டு செல்லுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற உலகளாவிய புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவ மாநாட்டில்

15

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் முக்கியத்துவம் மிக்க விசாரணை ஆரம்பம்

### ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, மே. 03

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகரகமவில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட மே தினப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அதிகாரி ஒருவர் தற்போது வெளிநாட்டில் இருப்பதாகவும், அது தொடர்பான வழக்குகளில் அரசாங்கம் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும்

15

## பெற்றோல் லீற்றர் 410 ரூபா!

கொழும்பு, மே. 03

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளை அதிகரிப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன்படி, பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன.

மாற்றப்பட்ட புதிய விலைகளின் முழு விபரம்:-

பெற்றோல் 92 ஒக்டேன்: ஒரு லீற்றரின் விலை 12 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 410.00 ரூபா ஆகும்.

15

## ரஷ்ய சுகாதார அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்

கொழும்பு, மே. 03

ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் மூன்று நாள் உத் தியோகபூர்வ பயணமாக இன்று இலங்கை வருகிறார்.

இதன்போது இலங்கை மற்றும்

15

## நீதிபதிகள் தீர்ப்பளிப்பதற்கு முன் தீர்ப்பை குறிப்பிடும் அமைச்சர்கள்!

### இது நீதிமன்ற அவமதிப்பு இல்லையா என கேள்வி எழுப்புகின்றார் வீரவன்ஸ



கொழும்பு, மே. 03

என்னை சிறைக்கு அனுப்புவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகிறார். நீதிமன்றங்கள் வழக்குகளை விசாரித்து நீதிபதிகள் தீர்ப்பளிப்பதற்கு முன்னர் அரசாங்கத்தின் அமைச்சர்கள் தீர்ப்பை முன்கூட்டியதாகவே குறிப்பிடுகிறார்கள். இது நீதிமன்ற அவமதிப்பு

15

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசின் மற்றொரு பாரிய மோசடியை அடுத்த வாரம் அம்பலப்படுத்துவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, மே 03

அரசாங்கத்தின் பாரிய ஊழல்களைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் நிலையில், நிலக்கரி ஊழலை விடவும் இரண்டு மடங்கு பெரிய மற்றுமொரு ஊழலையும் எதிர்வரும் 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்துவோம். ஊழலற்ற, தூய்மையான ஆட்சியை முன்னெடுக்க சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் மக்கள் இணைய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் அழைப்பு விடுத்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மே தினக் கூட்டம் வெள்ளிக்கிழமை கொழும்பு - மாளிகாவத்தை பீ.டி.சிறிசேன மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மரிக்கார் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலுக்கு முன்னதாக 18 மாதங்களுக்கு முன்பு மேடைகளில் ஏறி நின்று, மற்றவர்கள் அனைவரையும் திருடர்கள் என்று கூறி, தாங்களே சிறந்தவர்கள் என்று மக்கள் முன்னிலையில் பெருமை பேசிக் கொண்டிருந்தனர். நாட்டை முன்னேற்றப் போவதாகக் கூறி பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றினர். கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கான வரியைக் குறைப்பதாகவும், மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதாகவும் கூறி பெண்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்கள், தற்போது எந்தவிதச் சலுகைகளையும் வழங்கவில்லை. - என்றார். (எ)

# டெங்கு நோயினால் இதுவரை 12 பேர் பலி

## 25,082 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, மே 03

2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 25,082 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, மாத்தறை, காலி, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் கொழும்பு மாநகர சபை பிரிவிலும் அதி களவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அந்தப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர சுட்டிக்காட்டினார்.

அத்துடன, டெங்கு நோய் காரணமாக இதுவரையில் 12 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் வெளிப்படுத்தினார்.

எவருக்கேனும் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நிலவுமாயின், உடனடியாக மருத்துவரை அணுகி அது டெங்கு நோயா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர அறிவுறுத்தினார்.

மருத்துவரைச் சந்திக்கும் வரை காய்ச்சலுக்கு பெரசிட்டமோல் தவிர்ந்த வேறு மருந்துகளை பயன்படுத்த வேண்டாம் என்றும், நுளம்பு கடியிலிருந்து பாதுகாப்பைப் பெற தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# ராகம அயதி மையத்தில் சேவைகளை பெற 16,000 மாற்றுத்திறனாளி குழந்தைகள் பதிவு

கொழும்பு, மே 03

ராகம "அயதி" மையத்தில் சேவைகளைப் பெறுவதற்காக 16,000 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தினமும் 60 முதல் 100 குழந்தைகள் வரை சேவைகளைப் பெற வருகின்றனர் என்று அயதி மையத்தின் மருத்துவக் குழுவின் தலைவரும் குழந்தைகள் நல மருத்துவரான பேராசிரியர் சமன்மலி சுமனசேன, சுகாதார பிரதி அமைச்சரிடம் தெரிவித்தார்.

இலங்கையின் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான முதல் தேசிய மையம் என்று அறியப்படும் ராகம "அயதி" மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான தேசிய மையத்தை, சுகாதாரப் பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி பார்வையிட்டார்.

இந்த மையம், சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு பிரிவுகளின் கீழ் ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது.

பேச்சு மற்றும் மொழி சிகிச்சை, இயன்முறை சிகிச்சை, தொழில் சார் சிகிச்சை, அதிநவீன செவிப்புலன் பிரிவு மற்றும் உளவியல் ஆலோசனை சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள், பல்துறை வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் சிகிச்சையாளர்களால் சேவைகள் தொலைநிலை சுகாதார சேவைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

சுகாதாரத் துணை அமைச்சர் அங்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகளை ஆய்வு செய்ததுடன், மையத்தின் முக்கிய தேவைகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் எதிர்கால சேவை மேம்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதி அமைச்சர் அயாதி மையத்தின் வைத்திய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும், மையத்தின் மனிதவளத்தை அதிகரிக்க வேண்டிய தன் அவசியத்துக்கும் அவர் விசேட கவனம் செலுத்தினார்.

தற்போது, இந்த மையத்தில் சேவைகளைப் பெறுவதற்காக 16,000 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தினமும் 100 முதல் 60 குழந்தைகள் வரை சேவைகளைப் பெற வருகின்றனர்.

அயாதி மையத்தின் மருத்துவக் குழுவின் தலைவரும் குழந்தைகள் நல மருத்துவரான பேராசிரியர் சமன்மலி சுமனசேன, சுகாதார பிரதி அமைச்சரிடம் இதைத் தெரிவித்தார். (எ)

# ஒரே நாளில் 479 பேர் கைது

கொழும்பு, மே 03

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 479 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 25,290 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 21 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 165 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 107 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 74 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 62 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,132 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 8 இலட்சத்து 50,000 சுற்றுலாப்பயணிகள் நான்கு மாதங்களில் நாட்டுக்கு வருகை

கொழும்பு, மே 03

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 8 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் முறையே 207,182 மற்றும் 218,350 சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் பதிவாகியுள்ளன.

இது 2024 மற்றும் 2018 ஆகிய இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுகிறது.

எவ்வாறாயினும், 2026 மார்ச் மாதத்தில் இந்த நேர்மறையான போக்கில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளின் வருகை 183,979 ஆகக் குறைந்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமா கவே இந்தத் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், ஏப்ரல் மாதத்தில் 117,893 சுற்றுலாப் பயணிகள் மட்டுமே நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மார்ச் மாதத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், 2026 ஆம் ஆண் டின் முதல் நான்கு மாதங்கள் நிறைவடையும் போது சுற்றுலாப் பயணிகளின் மொத்த வருகை 858,527 ஐ எட்டியுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும் என அந்த அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா வளர்ச்சி அதிகார சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# சட்டவிரோத மதுபானத்துடன் சீன யுவதி கைது

கொழும்பு, மே 03

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொடுண்டா கார்டன் பகுதியில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மற்றும் சிகரெட்களுடன் சீன யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் அதிகாரிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 257 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் 100 சிகரெட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சீன நாட்டைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதி என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

கடந்த ஞாயிறு இதழில் வெளிவந்த தந்தை செல்வா நினைவுக் கட்டுரையை மூத்த ஊடகவியலாளர் வரதராஜன் மரியாம் பிள்ளை (நியூசிலாந்து) எழுதியிருந்தார். அவரது பெயரை குறிப்பிட தவறியமைக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# நிலக்கரி ஊழலால் ஏற்பட்ட இழப்பை வரிகள் மூலம் வசூலிக்க அரசு திட்டம்

## ஹர்ஷ டி சில்வா சாடல்

கொழும்பு, மே 03

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்று கூறப்பட்டாலும், இம்மாதம் 10ஆம் திகதியளவில் மீண்டும் 11 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்பட வாய்ப்புள்ளது. நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற ஊழலால் ஏற்பட்ட 18 பில்லியன் ரூபாய் இழப்பை மக்கள் மீது சுமத்த வேண்டாம் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியும், அரசாங்கம் அதை மறைமுகமாக வரிகள் மூலம் மக்களிடமே வசூலிக்கத் தயாராகிக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மே தினக் கூட்டம் வெள்ளிக்கிழமை கொழும்பு - மாளிகாவத்தை பீ.டி.சிறிசேன மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவையாகும். நரிகள் தங்களை விசேஷமானவை என்று காட்டிக்கொள்ள பச்சை வண்ணம் பூசிக்கொண்டன. ஆனால், மழை பெய்தபோது அந்த வண்ணம் கரைந்து அவற்றின் உண்மை முகம் தெரிந்துவிட்டது. அதேபோல், ஜே.வி.பி தலைமையிலான இந்த அரசாங்கமும் மக்களை ஏமாற்றியிருக்கிறது. இப்போது அவர்களின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது.

வீடு கட்டும்போது நிதி உதவி வழங்கப்படும் என்று 42 இலட்சம் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாறாக, கொழும்பு போன்ற நகரங்களில் வீடு கட்டுவது இன்று மிகவும் கடினமாகியுள்ளது. புத்தளம் பகுதியில் பெண்களின் தலைமுடியில் அதிகளவு பாதரசம் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கும் ஒரு பாரிய சுற்றுச்சூழல் பிரச்னையாகும். - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையை பாராளுமன்றத்தில் நான் முறையிடுவேன்

## தொலைபேசியில் எச்சரித்த மனோ எம்.பி.



கொழும்பு, மே 03

காவத்தை பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட நிலகாமம் பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் அடக்குமுறைகள் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், காவத்தை பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

காவத்தை பெருந்தோட்டப் பகுதிகளில் கடந்த பத்து வருடங்களாகப் பாதுகாப்புப் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். கள்ளச் சுரங்கம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு இவர்கள் அங்குள்ள தொழிலாளர்களை அச்சுறுத்துவதையும், உடல் ரீதியாகத் தாக்குவதையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பொலிஸார் அல்லது சிவில் அதிகாரிகளுக்குரிய கடமைகளை இத்தகைய தனியார் பாதுகாப்புப் பிரிவினர் கையில் எடுப்பது சட்டவிரோதமானது. சமீபத்தில் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி நாடெங்கும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தோட்ட நிலங்கள் எதுவும் நிறுவனங்களுக்குச் சொந்தமானவை அல்ல. அவை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரச காணிகளே ஆகும். தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம், பயிர் செய்யப்படாத காணிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் மக்கள் ஆணையைப் பெற்றுள்ளது.

200 வருடங்களாக இந்தத் தோட்டங்களை உருவாக்கி உழைத்த மக்களுக்கு அங்கு வாழும் உரிமை உண்டு. தேயிலை அல்லது ரப்பர் கைத் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காகக் காணிகளைப் பயன்படுத்துவதை எவரும் தடுக்க முடியாது.- என்றார். (எ)

# எரிபொருள் விலையில் மாற்றமில்லை: பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, மே 03

எரிபொருள் விலையில் எந்த வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை திருத்தம் குறித்து தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பான தீர்மானம் எதிர்காலத்தில் எடுக்கப்படும் எனவும் கூட்டுத்தாபனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நாட்டில் இறுதியாக கடந்த மார்ச் 21ஆம் திகதி எரிபொருள் விலைகள் அதிரடியாக அதிகரிக்கப்பட்டன. அன்று முதல் அமுலிலுள்ள தற்போதைய விலைப் பட்டியல் வருமாறு,

**92 ஒக்டேன் பெற்றோல்: 81** ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் 398 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**95 ஒக்டேன் பெற்றோல்: 90** ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் 455 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**ஓட்டோ டீசல்: 79** ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் 382 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**சூப்பர் டீசல்: 90** ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் 443 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**மண்ணெண்ணெய்: 60** ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் 255 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. (எ)

# கிழக்கு, மத்திய மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, மே 03

மத்திய, சப்ரகமுவ, மேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென் மாகாண கரையோரப் பிராந்தியங்களிலும் அத்துடன் களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யக் கூடும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மொனராகலை மாவட்டத்திலும் இன்று பகல் வேளையில் அதிகரித்த வெப்ப நிலையை உணரக்கூடியதாக இருக்கும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

சிலாபம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வெசாக் தான நிகழ்வு பதிவுகள் திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

கொழும்பு, மே 03

வெசாக் தன்சல் பதிவுகள் திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் தான நிகழ்வுகளை பதிவு செய்யும் பணிகள் வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக மட்டங்களில் இப்பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

தன்சல்களை நடத்துவது தொடர்பான விசேட வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இது குறித்து பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் வினவி மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டும் நாடளாவிய ரீதியில் 382 தன்சல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தகவல் கிடைத்ததாக சமில் முத்துகுட குறிப்பிட்டார்.

அந்தத் தன்சல்களும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் மே மாதத்தில் இரண்டு பௌர்ணமி தினங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் நேற்று முன்தினம் வெசாக் பௌர்ணமி தினமாக முன்னதாக கருதப்பட்டது.

இருப்பினும், மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் படி, மே 30ஆம் திகதி வரும் பௌர்ணமி தினத்தை "வெசாக் பௌர்ணமி" தினமாக பெயரிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பஸ் - கார் விபத்து!

கிளிநொச்சி, மே. 03

கிளிநொச்சி - பரந்தன் ஏ-9 பிரதான வீதியில் நேற்று காலை கார் ஒன்றும், தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில்

இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற கார் ஒன்றும் இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் உயிரிழப்புகள் அல்லது கடுமையான காயங்கள் எதுவும் பதிவாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## நிமால் சிறிபாலடி சில்வா அழைப்பு

கொழும்பு, மே 03

தொழிலாளர்களின் உரிமைகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அர சாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் எதிர்க்கட்சிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் மேதின கூட்டம் வெள்ளிக்கிழமை பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# போதைப்பொருள் ஒழிப்பு மேலும் 748 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 03

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், வெள்ளிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 748 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 05 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 754 சோதனைகள் நடத்தப்பட்டதுடன் ஒருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டார்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய சந்தேகநபர்களிடமிருந்து **256 கிராம் ஹெரோயின், 485 கிராம் ஐஸ், 25 கிராம் கொக்கெய்ன், 03 கிலோ 822 கிராம் கஞ்சா, 89,712 கஞ்சா செடிகள், 250 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 05 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 302 போதை மாத்திரைகள், 35 கிராம் மதனமோதகம் மற்றும் 44 கிராம் மாவா போதைப் பொருள்** என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு நினைவு எழுச்சி மாநாடு குறித்து கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே. 03

1976ஆம் ஆண்டு தந்தை செல்வாவினால் முன்வைக்கப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு நினைவு எழுச்சி மாநாடு தொடர்பான கலந்துரையாடல்கள் வடக்கு, கிழக்கில் பரவலாக நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு எழுச்சி மாநாட்டுக் குழுவின் தலைவரும் சிவகுரு ஆதீன முதல்வருமான வேலன் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மத தலைவர்கள், பொதுமக்கள் அமைப்புகள் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா அரங்கில் நடைபெற வுள்ள வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் நோக்கில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆட்சி மாற்றத்துக்கான ஆரம்பம்: சுதந்திர கட்சி ஆட்சி அமைக்கும்

## விஜயதாஸ ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, மே 03

நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அடித்தளமே இந்த மே தின கூட்டம். எதிர்கால அரசியல் மாற்றத்துக்கான ஆரம்பமாகும். சவால்களை எதிர்கொண்டு சுதந்திர கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும்வரை நாங்கள் ஓயப்போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் மே தின கூட்டம் நேற்று முன்தினம் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பொய் பிரசாரங்களால் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். இந்த அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மீது மக்கள் பாரியளவில் நம்பினார்கள். தற்போது ஏமாற்றமடைந்துள்ள மக்கள் எந்த பக்கம் செல்வதென அறியாமல் இருக்கும் நிலையில், இவ்வாறான நேரத்திலே சிறீலங்கா சுதந்திர கட்சி மக்களுக்கு தேவைப்படுகிறது. அதேநேரம் கெம்பல் மைதானத்தில் கூடியிருக்கும் இது சாதாரண மே தின கூட்டம் என நினைக்க வேண்டாம். இது எதிர்கால அரசியல் மாற்றத்துக்கான ஆரம்பமாகும்.

அன்று தொழிலாளர்கள் 8 மணிநேர வேலை கோரியே போராட்டம் மேற்கொண்டனர். ஆனால், இன்று எமது மக்கள் வாழ்வதற்கான உரிமையை கோரியே போராட்டம் மேற்கொள்கிறார்கள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 18 மாதங்களில் ஓர் இலட்சத்துக்கும் அதிகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சாதாரண வியாபாரிக்கு வியாபாரம் செய்ய முடியவில்லை. சுயதொழில் செய்பவர்களுக்கு அவர்களின் தொழிலை செய்ய முடியாமல் இருக்கிறது. விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய உரம் இல்லை. இதற்கு பொறுப்புக்கூற நாட்டில் ஆட்சியாளர்கள் யாரும் இல்லை"- என்றார். (எ)

# கடும் வெயில் காரணமாக கால்நடைகள் கடும் பாதிப்பு

## ஊர்காவற்துறையில் அவசர சிகிச்சை

யாழ்ப்பாணம், மே 04

ஊர்காவற்துறைப் பகுதிகளில் தற்போது நிலவி வரும் கடும் வெயில் காரணமாக கால்நடைகள் கடும் பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளன.

வெயிலின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் பல மாடுகள் மயங்கி வீழ்ந்தன. ஒரு சில மாடுகள் உயிரிழந்ததாக பொதுமக்கள் தெரிவித்த போதிலும், அவை இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இருப்பினும், வெயிலின் தாக்கத்தால் மயங்கி வீழும் மாடுகளுக்கு, அந்தந்த இடங்களுக்கே நேரில் செல்லும் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி, அவசர சிகிச்சைகளை அளித்து அவற்றை ஆபத்திலிருந்து காப்பாற்றி வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதிக வெப்பம் காரணமாக பால் உற்பத்தி குறைவடைதல் மற்றும் சினை மாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படுதல் போன்ற சிக்கல்களும் எழுந்துள்ளன.

எனவே, கால்நடைகள் போதிய அளவு நீர் அருந்துவதை உறுதிப்படுத்துமாறும், கடும் வெயில் வேளைகளில் வெட்ட வெளிகளில் மாடுகளை கட்டி வைப்பதைத் தவிர்க்குமாறும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ)

# நண்பர்களுடன் நீராடச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணம்!

இரத்தினபுரி, மே 03

செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுப்பில வாவி பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தனது நண்பர்களுடன் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் என அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து செவனகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அநுரவின் 18 மாத ஆட்சியில் தேசிய பாதுகாப்பு தோல்வி

## சுரேன் ராகவன் தெரிவிப்பு

கொழும்பு, மே 03

அரசாங்கத்தின் 18 மாத ஆட்சியில் நாட்டின் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தும் தோல்வியடைந்துள்ளது. அதனால், சிறீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க அனைவரும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கிறோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் மே தின கூட்டம் நேற்று முன்தினம் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 18 மாதங்கள் கழிந்தும் மக்களுக்கு அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற தவறி இருக்கிறது. மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை வைத்தே 159 உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு பெற்றுக்கொடுத்தார்கள். அதனால், அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என்றால் ஆட்சியை கைவிட்டு வீட்டுக்கு செல்லுமாறு அநுரகுமாரவுக்கும் ஹரிணிக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ஆனால், வரிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய எதுவும் இதுவரை நாட்டுக்கு வரவில்லை. தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாண மாகாண சபை தேர்தலை இன்னும் ஏன் நடத்தாமல் இருக்கிறீர்கள். தேர்தலை நடத்தினால் அநுரகுமாரவுக்கும் ஹரிணிக்கும் வீட்டுக்கு செல்ல வேண்டிவரும். அதனாலேயே தேர்தலை நடத்தாமல் இருக்கிறார்கள்"- என்றார். (எ)

# தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து

நுவரெலியா, மே 03

நுவரெலியா - ராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புரூட்சைட் தோட்டத்துக்குச் சொந்தமான தேயிலை தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தால் தொழிற்சாலைக்கு பாரிய சொத்து சேதங்கள் ஏற்பட்டன. எனினும், எவருக்கும் உயிரிழப்போ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் ராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)




# இளங்கோ அடிகளாரின் நினைவு தினம்





வவுனியா, மே 03

தமிழ் பெரியார் இளங்கோ அடிகளாரின் நினைவு தினம் நேற்று முன்தினம் வவுனியா மாநகர சபையால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள இளங்கோ அடிகளாரின் திருவுருவச் சிலையடியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபை ஆணையாளர், தமிழ்மணி அகளங்கன் உட்பட சமூக ஆர்வலர்கள், தமிழ் பெரியார்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இளங்கோ அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்ததோடு மலர் அஞ்சலியும் செலுத்தி நினைவு அனுஷ்டித்தனர்.

இதேவேளை, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ-10)

## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் ஐந்து



அமரர் திருமதி வினிபிறெட் கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்- புனித திரேசாள் கன்னியர்மடம் - அச்சுவேலி)
மலர்வு 05.06.1935 உதிர்வு 03.05.2021

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"(யோவான் 11:25)

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாய்
எங்களை வாழவைத்த அன்புத் தாயே
நல் அன்னையாய் ஆசானாய் அனைவர்
மனதிலும் நிறைந்திருந்தீர்களே!
இன்பத்திலும் துன்பத்திலும் எமை
வளம் படுத்தி வாழ கற்றுத்தந்தீரே
காலவோட்டத்தில் நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டுகள் ஐந்து கழிந்ததுவோ?
மனம் நம்ப மறுக்கிறது தாயே
நாம் வாழும் வரை நின் நினைவுகள் வாழும்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
03.05.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சதி முயற்சி பற்றிய ஜனாதிபதியின் குற்றச்சாட்டு

ராஜபக்சாக்கள் தங்களது ஆட்சிக்கு கிளம்பிய எதிர்ப்புகளை எல்லாம் உள்நாட்டு, வெளிநாட்டுச் சதி என்று குற்றஞ்சாட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நான்கு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சியை அடுத்து நாட்டில் இருந்து வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச திரும்பிவந்து "சதி" (The Conspiracy) என்ற தலைப்பில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

ஆட்சியாளர்கள் தங்களது குறைபாடுகளையும் தவறுகளையும் மக்களின் கவனத்தில் இருந்து திசை திருப்புவதற்கு சதி என்ற கவசத்துக்கு பின்னால் ஒளிந்துகொள்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. அவ்வாறு செய்யத் தொடங்கும் போது அவர்கள் ஒரு "தற்காப்பு" நிலைக்குச் செல்கிறார்கள் என்பதே அர்த்தமாகும்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இப்போது தங்களது அரசாங்கத்துக்கு எதிராக எதிரணிக் கட்சிகள் சதி முயற்சிகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டத் தொடங்கியிருக்கிறார்.

நுவரேலியாவில் நேற்று முன்தினம் தேசிய மக்கள் சக்தியின் மேதினப் பேரணியில் உரையாற்றிய அவர், "குறிப்பிட்ட சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரசாங்கத்தை நிலை குலையச் செய்வதற்கும் நாட்டில் குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதற்கும் சதிமுயற்சிகளில் ஈடுபட்டிருக்கி றார்கள். எமது அரசாங்கத்தின் உறுதிப்பாடு என்பது மக்களின் நம்பிக்கையின் மீது தங்கியிருப்பதால் அவர்களின் சூழ்ச்சித்தனமான காரியங்கள் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான திட்டங்களை ஆராய்வதாகக் கூறிக் கொண்டு சிறிய எதிர்க்கட்சிக் குழுவொன்று முன்னாள் அமைச்சர் ஒருவரின் வீட்டில் அல்லது அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகத்தில் சந்திப்புக்களை நடத்திவருகிறது. அவர்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீட்டுக்கு அனுப்பமுடியாது. வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என்று நாட்டின் சகல பாகங்களிலும் மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்றும் திசநாயக்க கூறினார்.

அண்மைய நாள்களாக ஊழல் முறைகேடுகள் தொடர்பில் எதிரணி கட்சிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்துக்கு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது மறைக்க முடியாத உண்மை. அந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வது என்பது முற்றிலும் அரசாங்கத்தின் பொறுப்பு.

எதிரணி கட்சிகள் அரசாங்கத்தை நிலை குலையச் செய்து நாட்டில் குழப்ப நிலையைத் தோற்றுவிக்க சதி முயற்சிகளில் ஈடுபடுகின்றன என்றால் அது தொடர்பில் நம்பகமான சான்றுகளை முன்வைத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பேயாகும்.

அதைவிடுத்து அரசாங்கத்தின் குறைபாடுகள் மீதான விமர்சனங்கள் எல்லாவற்றையும் சதிமுயற்சிகள் என்ற வட்டத்துக்குள் அடக்குவது பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்துக்கு பொருத்தமான செயல் அல்ல.

கடந்த காலத்தில் அரசாங்கங்களுக்கு எதிராக ஜனதா விமுக்தி பெரமுன / தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டுக்களை முன்வைத்த வேளைகளிலும் அவற்றின் தலைவர்கள் இதே சதிமுயற்சி / சூழ்ச்சி குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததை ஜனாதிபதி திசநாயக்க உட்பட அரசாங்கத் தலைவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்பகிறோம்.

# ஏ-9 வீதியில் பயணிக்கும் வாகனங்கள் பரிசோதனை

கிளிநொச்சி, மே. 03

கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகளின் உதவியுடன், கிளிநொச்சி ஏ-9 வீதியில் பயணிக்கும் அனைத்து வாகனங்களும் திடீரென பரிசோதனை செய்யப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தின் தலைமை பரிசோதகர் தலைமையில் பரிசோதனை நடைபெற்றது.

பரிசோதனையின்போது, பஸ்கள் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு ஏற்ற நிலையில் உள்ளதா என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. வீதியால் செல்வதற்கு தரமற்ற வாகனங்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதன்போது பரந்தன் மற்றும் முருகண்டி வீதி போக்குவரத்தில் ஈடுபடும் குருந்துர சேவை பஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த வாகனங்களில் உள்ள குறைபாடுகளை 14 நாள்களுக்குள் சரி செய்து, மோட்டார் வாகன பரிசோதகரிடம் ஆய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொது போக்குவரத்து வாகனங்களில் விபத்துகள் ஏற்படக் கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான மேலதிக உதிரிபாகங்களை அகற்றவும் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# யாழ். இந்து மாணவன் தாரகன் சாதனை



யாழ்ப்பாணம், மே. 03

சர்வதேச அரங்கில் இலங்கையின் பெருமையை மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியுள்ளார் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் பரமலிங்கம் தாரகன்.

சமோவா நாட்டில் அண்மையில் நிறைவடைந்த பொதுநலவாய இளையோர் மற்றும் கனிஷ்ட பளுதூக்கல் சம்பியன்சிப் போட்டியில் அவர் வெண்கலப் பதக்கத்தைச் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 27 முதல் மே முதலாம் திகதி வரை சமோவாவின் ஏபியா நகரில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் கனிஷ்ட வயதுப் பிரிவின் கீழ், 110 கிலோகிராமுக்கும் அதிகமான எடைப் பிரிவில் பரமலிங்கம் தாரகன் களமிறங்கினார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், ஸ்னாட்ச் முறையில் 98 கிலோகிராம் எடையையும், கிளீன் அண்ட் ஜெர்க் முறையில் 132 கிலோகிராம் எடையையும் அவர் வெற்றிகரமாகத் தூக்கினார்.

இதன்படி, ஒட்டுமொத்தமாக 230 கிலோகிராம் எடையைத் தூக்கி, மூன்றாம் இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில், வடபகுதியிலிருந்து சர்வதேச விளையாட்டு மேடைகளில் தடம் பதிக்கும் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில், யாழ். மண்ணுக்கும் தான் கல்வி கற்கும் இந்துக் கல்லூரிக்கும் மாபெரும் பெருமையைத் தேடித்தந்துள்ள தாரகனுக்குப் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை பளுதூக்கல் சங்கத்தின் கீழ் உரிய பயிற்சிகளைப் பெற்று, சர்வதேசத் தரத்திலான இச் சாதனையை அவர் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜேர்மனியிலிருந்து 5000 துருப்புகளை மீளப்பெற அமெரிக்கா திடீர் முடிவு

வாஷிங்டன், மே 03

ஜேர்மனியிலிருந்து 5000 துருப்புகளை மீளப்பெற அமெரிக்க பாதுகாப்புத் துறை திட்டமிட்டுள்ளது.

ஈரான் உடனான போர் விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதி பிரீட்ரிக் மெர்ஸ் ஆகியோருக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதலுக்கு மத்தியில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஈரானிய பேச்சுவார்த்தையாளர்களால் அமெரிக்கா அவமானப்படுத்தப்பட்டுள்ளது என்று மெர்ஸ் குறிப்பிட்டதையடுத்து, அவரை ட்ரம்ப் விமர்சித்த மறுநாளே இந்த முடிவு வெளியாகியுள்ளது.

குடிவரவு மற்றும் எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் மெர்ஸ் மிக மோசமாகச் செயல்படுகிறார் என ட்ரம்ப் தமது சமூக வலைத்தள கணக்கில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் இத்தாலி மற்றும் ஸ்பெயினிலிருந்தும் அமெரிக்க துருப்புகளை மீளப்பெறுவது குறித்து ட்ரம்ப் சூசகமாக தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாத நிலவரப்படி, ஜேர்மனி முழுவதும் உள்ள தளங்களில் 36,000 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பணியாற்றி வருகின்றனர்.

பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத்தின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பென்டகன் ஊடகப் பேச்சாளர் சீன் பார்னெல் தெரிவித்தார்.

இந்த துருப்புக்கள் வெளியேற்றம் அடுத்த 6 முதல் 12 மாதங்களுக்குள் நிறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேட்டோ கூட்டணியை நீண்டகாலமாக விமர்சித்து வரும் ட்ரம்ப், ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைக்க மறுக்கும் நட்பு நாடுகள் மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகிறார்.

ஈரான் போரில் உதவி செய்யாததற்காக இத்தாலி மற்றும் ஸ்பெயினையும் அவர் கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொழில்நுட்பத்தை எதிர்கொள்வோம்!

பாலசாண்டில்யன்

இயந்திரமயமாக்கல் உலகெங்கும் அதிவேகமாகப் பரவி வருகிறது. துணிதுவைக்கும் இயந்திரம், ரயில் நிலையங்களில் நகரும் படிக்கட்டுகள், வங்கிகளில் பணம் எண்ணும் இயந்திரம், பணம் பெறும் இயந்திரம், பார் கோட் பில்லிங் இயந்திரம் என நாம் காண்கின்ற அல்லது பயன்படுத்துகிற இயந்திரங்கள் குறித்துச் சொல்லவில்லை.

பல தொழிற்சாலைகளில் மூளையை அதிகம் பயன்படுத்தாத வழக்கமான செயல்பாடுகளை மனிதர்கள் செய்கிறார்கள் என்றால், அங்கே மனிதர்கள் தேவை இல்லை. அங்கே ரோபோ என்று சொல்லக்கூடிய தானியங்கி இயந்திரங்களின் பயன்பாடு இன்று அதிகமாகி வருகிறது. இதன் காரணமாக பல பன்னாட்டு உற்பத்தி, வாகன உற்பத்தி நிறுவனங்களில் உதவியாளர்களுக்கு வேலை போய் விட்டது.

அங்கே ஒரு ரோபோ வந்து அதிவேகமாக அற்புதமாக அசுரத்தனமாக வேலை செய்கிறது. அதிக உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம், செலவினக் கட்டுப்பாடு, லாபம் இவற்றை முன்வைத்து இந்த நடவடிக்கைகளில் நிறுவனங்கள் சில முடிவுகளை எடுக்கின்றன. சுமார் 1,200 கேள்விகளுக்கு பதில் சொல்லும் ரோபோவை ஒரு இந்திய தனியார் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இதைப் பார்க்கும் போது, உற்பத்தித் துறை தவிர வணிகம், சேவைத் துறைகளிலும் இயந்திரமயமாக்கல் அதிவேகமாகப் பரவி வருகிறது என உணரலாம். மேலும், நேரடியாக கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்குவதைவிட, கைப்பேசி செயலி வாயிலாக ஆன்லைனில் பொருள்களை வாங்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. அமேசான் மற்றும் பிளிப்கார்ட் நிறுவனங்களே இதற்கு சாட்சி.

பணப் பரிவர்த்தனை செய்ய மக்கள் இன்று வங்கிகளுக்கு செல்வதற்குப் பதில் கைப்பேசி செயலி வாயிலாக அதைச் செய்கிறார்கள். குற்றங்கள் பெருகிவரும் இன்றைய சூழலில் துப்பு துலக்க நாய்களுக்குப் பதில் பெரும்பாலும் சிசிடிவி கேமராக்கள், கைப்பேசி ஆடியோக்கள், விடியோக்கள்தான் பயன்படுகின்றன. உணவங்களில்




பரிமாற இனி தானியங்கி இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு விரைவில் வரும். அப்போது உணவு பரிமாறும் பணியில் இருப்போருக்கு வேலை பறிபோகும். பெட்ரோல் நிலையங்களில் பணியாளர்கள் வேலை இழக்கலாம்.

துணிக் கடைகளில் கணினியுடன் இணைக்கப்பட்ட கேமராக்கள் மூலம் நாம் ஒரு குறிப்பிட்ட ஆடையில் எப்படி இருப்போம் என்று பட்டனை அழுத்தினால் தெரிந்து விடும். அதை அணிந்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. வெளிநாடுகளில் பிள்ளைகளுடன் செல்ல ரோபோ குரு உருவாக்கி உள்ளார்கள். இது மாணவர்களோடு பள்ளிக்குச் சென்று எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருக்கிறது.

அங்கே ஒருபடி மேலே சென்று மாணவர்களுக்கு உடல்நலன் சரியில்லை. அன்று பள்ளி செல்ல முடியவில்லை எனும் சூழலில் அவர்களுக்குப் பதிலாக இந்த ரோபோ குரு பள்ளிக்குச் செல்லும் என்று சொல்கிறார்கள். வெகு விரைவில் ஆசிரியர்களுக்கு பதில் ரோபோ குரு வரலாம்.

பள்ளி மேற்படிப்பு, கல்லூரி மேற்படிப்பு, திறன் மேம்பாடு இவற்றுக்கு மட்டும் ஆசிரியர்கள் இருப்பார்கள். மற்ற இடங்களில் அங்கே இயந்திரம் வந்து விடும் எனும் அபாயம் உருவாகி வருகிறது. கைக்கடிகாரம் மூலம் ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, எடை, எவ்வளவு நடந்து இருக்கிறோம், எத்தனை கலோரி செலவாகி போன்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம். உணவு, பொருள்கள் வாங்குவதற்கு, வாடகை வாகனங்களை அழைக்க என் அனைத்துக்கும் கைப்பேசி செயலிகள் வந்து விட்டன.

அதாவது ஏற்கெனவே நம்மிடம் இருக்கும் திறன் இனி பயனற்றுப் போகும். புதிய திறன்களை கற்றுக் கொள்ள வேண்டி வரும். நாம் செய்யும் தற்போதைய வேலைக்குப் பதில் புதிய வேலை செய்யும் நிலை உருவாகும். நாளுக்கு நாள் இயந்திரமயமாதல் அதிகரிக்கும்போது, அந்த புதிய தொழில்நுட்பத்துக்கேற்ப நம்மை தயார்படுத்திக் கொள்வது அவசியம். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் இந்தச் சூழலில், வருங்கால இளைஞர்கள் அதற்கேற்ப உள்ள படிப்புகளைத் தேர்வு செய்து படிக்க வேண்டும்.

ஏதாவது ஒரு படிப்பை படித்து விட்டு வேலை கிடைக்கவில்லை என்று கூறுவது இனி கூடாது. அதே போல், ஏற்கெனவே பணியில் இருப்பவர்கள் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொண்டால் அவர்களின் திறன் மேம்படுவதுடன் வேலையும் நிலைக்கும். எனவே, அன்றாடம் நம்மை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆயத்த ஆடைகளைப்போல, சுற்றுச் சுவர்கூடத் தயார் நிலையில் உள்ளதாக விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தபட்சம் ஒவ்வொரு மனிதரும் நான்கு அல்லது ஐந்து திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தான் படித்த படிப்புக்கு ஏற்ற வேலை என்று இல்லாமல் இருக்கும் புதிய வாய்ப்புகளுக்கு ஏற்ப தன்னைத் தயார் செய்து கொள்ளுதல்தான் இதற்கு முக்கிய தீர்வு. புதிய தொழில்நுட்பங்களின் வரவு இருந்தாலும், சிந்தித்து செயல்படுத்தும் பணிகளை எப்போதும் மனிதர்களே செய்வர். எனவே, சிந்திக்கும் புதிய உத்திகளைச் செயல்படுத்தும் நுட்பமான மனிதர்களாக நாமும் மாறுவோம்.

மாற்றத்தோடு வேகமாக நாமும் மாறுவோம். மாற்றம்தான் வளர்ச்சி என்பதைப் புரிந்து கொள்வோம். செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஒவ்வொரு துறையிலும் நுழைந்துவிட்ட இந்த நேரத்தில், அதை அறிந்துகொள்ள முனைவோம்! ●

## இந்தவார ராசிபலன் 01.02.2026 - 07.02.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 20
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் இல்லாமல் இருக்கும் , சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்களை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரிய கண்டிப்பாக நடக்கும். வியாபாரத்தில் வருமானம் கூடும், புதிய முயற்சிகளில் திட்டம் போட்டு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த முரண்பாடுகள் நீங்கி ஆனந்தம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சராசரியான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டங்கள் வரலாம் , சில இடங்களில் சிரமங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி மாற்றம் தாமதமாக நான். வியாபாரத்தில் மிதமான விற்பனை நடந்து அதற்கான லாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகி சங்கடப்படுத்தும். பிள்ளைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் உயர்வு உண்டாகும் , சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வுகளை எதிர்பார்க்கலாம். ஆனால் எதிர்பார்த்த முக்கிய காரியம் நல்ல முறையில் நடக்கும். வியாபாரத்தில் வருமானம் பெருகும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமை ஏற்படலாம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் இலகுவான நிலை இருக்கும், சில இடங்களில் இணக்கம் நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய வாய்ப்புகள் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த காரியம் உடனே நிறைவேறும். வியாபாரத்தில் வெற்றி கிடைத்து பணவரவு அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகளில் தைரியமாக இறங்கலாம்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று உயர்வான நன்மைகள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கடுமை நிலை இருக்கும். சில இடங்களில் வேலையில் சவால் நிறைந்ததாக இருக்கும். உத்தியோகத்தில் சில மாற்றங்கள் உண்டாகும். ஆனால் எதிர்பார்த்த வேலை மாறுதல் தள்ளி போகலாம். வியாபாரத்தில் வருமானம் தாராளமாக இருக்கும். புதிய முதலீடுகளில் திட்டமிட்டு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும், பிள்ளைகளால் சில சிரமங்கள் வரலாம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அதிகப்படியான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் முக்கியத்துவம் இருக்கும் , சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வுகள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் திட்டமிட்டபடி நடக்கும். வியாபாரத்தில் வருமானம் கூடி கையிருப்பு அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த போராட்டங்கள் விலகி மனநிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் பாராட்டுகள் கிடைக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கம் கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சவால் நிறைந்ததாக இருக்கும், சில இடங்களில் வேலை சுலபமாக நடக்கும். உத்தியோக ரீதியாக சில மாறுதல்களை எதிர்பார்க்கலாம், அதே நேரத்தில் வேலை உயர்வு பதவி மாற்றம் ஏற்படலாம். வியாபாரத்தில் சிறந்த முன்னேற்றம் உண்டாகும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கான நேரம். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் குறை, பிள்ளைகளால் சில சங்கடங்கள் உண்டாகும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிறப்பாக இருக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிக்கல்களை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் வருமானம் எதிர்பார்த்தபடி இருக்கும். புதிய முதலீடுகளில் நிதானமாக இறங்க வேண்டும். குடும்பத்தில் இருந்து வந்த போராட்டங்கள் விலகும், பிள்ளைகளால் நன்மை ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் அதிகமாக இருக்கும் , சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக தடைகளை சந்திக்க வேண்டி வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாக நடக்கும். தொழில் வியாபாரம் சராசரி நிலையில் இருக்கும், புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் குழப்ப மேகம் சூழும், பிள்ளைகளால் தேவையில்லாத செலவுகள் உண்டாகும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமை நிறைந்ததாக இருக்கும், சில இடங்களில் கலகலப்பு நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த மாற்றம் வரலாம், ஆனால் காத்திருந்த காரியம் கைகூடிவரும். வியாபாரத்தில் வருமானம் கூடி கையிருப்பு அதிகரிக்கும். தொழிலை விஞ்ஞான ரீதியாக கொண்டு செல்லும் நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் மறையும். பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சராசரியான பலன்கள் நடக்கும். சில இடங்களில் வேலையில் எதிர்ப்புகள் இருக்கும் , சில இடங்களில் கடுமை நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய சுமைகள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு ஒரு காரியம் நடக்கும். வியாபாரத்தில் லாபம் பெருகினாலும் செலவுகள் அதிகரிக்கும், தொழிலை நிதானமாக நடத்த தகுந்த நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த போராட்டங்கள் குறையும், பிள்ளைகளால் மனச்சங்கடம் வரலாம்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான நன்மைகள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் மிகுதியாக இருக்கும், சில இடங்களில் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் உண்டாகலாம், ஆனால் நினைத்த ஒரு காரியத்தில் தாமதம் உண்டாகும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகள் தோன்றலாம், புதிய முயற்சிகளில் நிதானமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தந்தை செல்வா நினைவுப் பேருரையில் பேராசிரியர் மாகாணசபை தேர்தல்கள், 13 வது திருத்தம் குறித்து பேசவில்லை!



வீரகத்தி தனபாலசிங்கம்

முதுபெரும் தமிழ் அரசியல் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் (தந்தை செல்வ ) 49 வது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசு கட்சியும் தந்தை செல்வா அறக்கட்டளையும் இணைந்து யாழ் நகரில் தந்தை செல்வா கலையரங்கத்தில் கடந்த வாரம் (ஏப்ரில் 26) நினைவுப் பேருரை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் பல்வேறு அரசாங்கங்களில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சர் போன்ற முக்கிய பதவிகளை வகித்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் 'கூட்டாட்சி (சமஷ்டி) முறையும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான பாதைகளும்' என்ற தொனிப் பொருளில் அந்த நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

பேராசிரியரை அழைத்தமை குறித்து தமிழர்கள் மத்தியில் சில வட்டாரங்களில் இருந்து குறிப்பாக சமூக ஊடகங்கள் வழியாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நினைவு நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்திய தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி கூட்டாட்சி முறையின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதே இன்று சகல தமிழ் அரசியல் கட்சிகளினதும் ஏகோபித்த நிலைப்பாடாக இருக்கும் நிலையில் நினைவுப் பேருரையை நிழத்துவதற்கு அவரை தந்தை செல்வா அறக்கட்டளை அழைத்திருப்பது முக்கியமான ஒரு தருணம் என்று குறிப்பிட்டார்.

ஒரு தேசிய இனத்தவர்களான இலங்கை தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சியைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தியலை அந்த மக்கள் மத்தியில் முதன் முதலில் விதைத்தவர் தந்தை செல்வா என்று கூறிய சுமந்திரன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்கு பேராசிரியர் பீரிஸை விடவும் சிறந்த ஒருவர் இருக்கமுடியாது என்பதை நியாயப்படுத்துவதற்கு அவரின் இரு முக்கியமான பங்களிப்புக்களை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளின்போது பேராசிரியர் பீரிஸ் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்புச் சட்ட நிபுணருமான கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் சேர்ந்து தயாரித்த முக்கியமான ஆவணம் பெருமளவுக்கு கூட்டாட்சி முறையின் அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தது என்று கூறிய சுமந்திரன், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் விடுதலை புலிகள் இயக்கத்துடன் பேராசிரியர் தலைமையிலான இலங்கை அரசாங்கத் தூதுக்குழு நடத்திய தொடர்ச்சியான பல பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் செய்யப்பட்ட பிரகடனத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கூட்டாட்சி முறையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய்வதற்கு இரு தரப்புகளும் இணங்கிக் கொண்டதையும் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டுப் போர்க் காலத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வு ஒன்றைக் காணும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள் சகலவற்றுக்குள்ளும் பேராசிரியர் பீரிஸும் நீலனும் இணைந்து தயாரித்த ஆவணமே ஒப்பீட்டளவில் மிகவும் சிறந்ததாக விளங்கியது என்பதில் சந்தேகமில்லை.

அந்த நேரத்தில் அந்த முன்மொழிவுகள் தமிழ் மக்கள் மத்தியில் உகந்த முறையில் எடுத்துச் சொல்லப்படுவதற்கு வாய்ப்பு இருந்திருக்குமானால், அவர்களின் பரந்தளவிலான ஆதரவை நிச்சயமாக அது பெற்றிருக்கும். நீலனைப் போன்ற ஒருவரை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலமாக படுகொலை செய்வதற்கு விடுதலை புலிகள் தீர்மானித்ததில் இருந்து அந்த ஆவணம் தங்களது நிகழ்ச்சித் திட்டத்துக்கு எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள் என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் கொண்டுவருகின்ற அரசியல் தீர்வு யோசனைகளை எதிர்க்கட்சி எதிர்க்கின்றதும் அரசாங்கங்கள் அரசியல் துணிவாற்றலை வெளிப்படுத்தாமல் அடிபணிந்து போவதுமான தென்னிலங்கையின் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்துக்கு சந்திரிகா அரசாங்கத்தின் ஆவணமும் பலியானது. அந்த ஆவணம் குறித்தும் விடுதலை புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின்போது செய்யப்பட்ட ஒஸ்லோ பிரகடனம் குறித்தும் பேராசிரியர் பீரிஸ் தனதுரையில் சுருக்கமாக விளக்கிக் கூறியிருந்தார். இன்றைய இளைய தலைமுறையினர் அவற்றைப் பற்றி அறிய வேண்டியது அவசியம் என்பதால் பொருத்தமான பகுதிகள் மீள்பிரசுரம் செய்யப்படுகின்றன.

"கூட்டாட்சி என்பது ஒரு தத்துவம் என்ற வகையில் பிளவுகளை ஏற்படுத்துவதை விடவும் பரந்த ஒரு பரிமாணத்தையே குறித்து நிற்கிறது. 1995 - 1997 காலப் பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மூன்று அரசியலமைப்பு முன்மொழிவுகளில் இது தெளிவாக வெளிப்பட்டது. முறையான ஒரு அரசியலமைப்புத் திட்டத்தில், மத்திய அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு எல்லையை நிர்ணயிப்பதில் இந்த முன்மொழிவுகள் அந்தப் பரிமாணத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை ஊசலாடின.



**பேராசிரியர் நிகழ்த்தப் போகும் தந்தை செல்வா நினைவுப் பேருரை அந்த மண்டபத்திற்குள் மாத்திரமல்ல, வெளியிலும் நீண்ட காலத்துக்கு எதிரொலிக்கும் என்று சுமந்திரன் வரவேற்புரையில் கூறினார். பீரிஸின் உரை வெளியில் எதிரொலிக்கிறதோ இல்லையோ மாகாண சபைகள் தொடர்பிலான அவரின் மௌனம் மாத்திரம் தெளிவாகக் கேட்கிறது.**

"அரசியலமைப்பு விவகாரங்கள், இன விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்த என்னுடன் இணைந்து 1995, 1996, 1997 ஆண்டுகளின் முன்மொழிவுகளை உருவாக்கிய எனது மதிப்பிற்குரிய நண்பர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களின் மரபுக்கு இந்த இடத்தில் நான் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன உட்பட பலரின் ஆதரவும் இதற்கு இருந்தது.

"நீலனும் நானும் இலங்கை பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களாக இருந்தோம் நான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ரோட்ஸ் புலமைப்பரிசில் பெற்றபோது, அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கு சென்றார். நாங்கள் இருவரும் 1994 ஆகஸ்ட் மாதம் ஒன்றாகவே இலங்கை பாராளுமன்றத்திற்குள் நுழைந்தோம் என்பது இன்னொரு தற்செயலான நிகழ்வாகும்.

"தமிழ் மக்களின் நலன்களையும் அபிலாசைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபோக உரிமை தமக்கே உண்டு என்ற விடுதலைப் புலிகளின் உரிமை கோரலுக்கு நீலன் தடையாக இருந்ததால், அவர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். அவர் உயிரோடு இருந்திருந்தால் எதிர்காலம் ஒருவேளை வேறு விதமாக அமைந்திருக்கக்கூடும்.

"1995 அரசியலமைப்பு முன்மொழிவுகள் கூட்டாட்சியின் வலுவான அம்சங்களைக் கொண்டிருந்தன, உண்மையில் அதற்கும் மேலாகச் சென்றன என்றும் கூறலாம். முன்மொழிவுகளின் சாரமாக அமைந்த பிராந்திய சபைகளுக்கு, ஒதுக்கப்பட்ட விடயங்களில் நிறைவேற்று, சட்டவாக்க மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. முக்கியமான சகல துறைகளிலும் இந்த அதிகாரங்கள் மத்திய அரசின் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்படவிருந்தன.

"நிதி தொடர்பாக, பிராந்திய சபைகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம், சர்வதேச கடன் பெறுதல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், சர்வதேச மானியங்களையும் அபிவிருத்தி உதவிகளையும் பெறுவதற்கான அதிகாரம் ஆகியவை வழங்கப்படவிருந்தன. சட்டம், ஒழுங்கு மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற முக்கியமான துறையில், முதலமைச்சரால் நியமிக்கப்படும் பிராந்திய பொலிஸ் ஆணையாளரின் தலைமையிலான பிராந்திய பொலிஸ் சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

"நிலம் என்பது தெளிவாகப் பகிரப்பட வேண்டிய ஒரு விடயமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. மத்திய அரசாங்கத்தின் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு சில இடங்களைத் தவிர, ஒரு பிராந்தியத்திற்குள் உள்ள அரச நிலங்கள் அனைத்தும் அந்தப் பிராந்திய சபையிடமே ஒப்படைக்கப்படவிருந்தன. இலங்கையின் முழுமையான அரசியல் பரிணாம வளர்ச்சியில், கூட்டாட்சி கட்டமைப்பை நோக்கிய மிகவும் வலுவான நகர்வை இந்த ஆவணம் பிரதிபலித்தது.

"1995 முன்மொழிவுகள் 1996 ஆம் ஆண்டில் விரிவான ஒரு வரைவின் மூலமாக மாற்றியமைக்கப்பட்டது ஒரு பின்னடைவான வளர்ச்சியாக அமைந்தது. ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டமையே அதன் அடிப்படைப் பலவீனமாகும். மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான அதிகார சமநிலையை அது அடிப்படை ரீதியாக மாற்றியமைத்ததுடன் பிராந்தியங்களின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு பலியாகும் நிலைக்கு வழிவகுப்பதாக அமைந்தது.

"அரசியலமைப்பு ஏற்பாடுகளினால் பாதுகாக்கப்பட்ட பிராந்தியங்களின் முழுமையான அதிகாரங்கள் மத்திய அரசின் நிறைவேற்று நடவடிக்கையினால் இரத்துச் செய்யப்படும்போது, அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடும் வாய்ப்பு கூட பிராந்தியங்களுக்கு வழங்கப்படவில்லை. இது நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

"இதை திருத்தியமைக்கும் ஒரு நடவடிக்கையாக 1997 ஆம் ஆண்டில் இன்னொரு முன்மொழிவுத் தொகுப்பு வெளியிடப்பட்டது. அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியலமைப்பின் அத்தியாயத்தின் உள்ளடக்கத்தினதும் மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் அதிகாரப் பகிர்வைக் கையாளும் இரு அட்டவணைகளினதும் உள்ளடக்கங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவதைத் தடுக்கும் 'வீட்டோ' அதிகாரத்தைப் பிராந்தியங்களுக்கு வழங்கும் ஏற்பாடு அதில் உள்ளடக்கப்பட்டது.

"இது பாராளுமன்றத்தின் அதிகாரங்களை பாரியளவில் குறைப்பதாக அமைந்ததுடன், ஒரு தீவிர நிலையிலிருந்து மற்றொரு தீவிர நிலைக்குச் செல்வதாக அமைந்தது. தன்னிச்சையான நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு நகர்த்தப்பட்டது. இந்த முன்மொழிவுகள் அவற்றுக்கு உள்ளேயே அழிவுக்கான விதைகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை.

" 2000 ஆகஸ்ட் 3 ஆம் திகதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் என்ற முறையில் நான் ஜனாதிபதி குமாரதுங்க சார்பில் சமர்ப்பித்த 'அரசியலமைப்புச் சட்டமூலம்" அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான விரிவானதும் முழுமையானதுமான முயற்சியாக அமைந்தது. அதில் 'கூட்டாட்சி' என்ற சொல் நேரடியாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும், அதன் சாராம்சம் உள்வாங்கப்பட்டிருந்தது. "இலங்கைக் குடியரசு மத்திய மற்றும் பிராந்திய நிறுவனங்களைக் கொண்டது" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மக்களின் சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றத்தினாலும் பிராந்திய சபைகளினாலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியால் மட்டுமல்லாது முதலமைச்சர்கள் மற்றும் பிராந்திய அமைச்சரவைகளின் ஆலோசனையின் பேரில் செயற்படும் ஆளுநர்களாலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

"பிராந்திய ஆளுநர்கள் பிரதமருடனான கலந்தாலோசனை மற்றும் பிராந்திய முதலமைச்சரின் உடன்பாட்டுடன்" ஜனாதிபதியால் நியமிக்கப்படவிருந்தனர். அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட விடயங்களில் பிராந்தியங்களுக்கான சட்டவாக்க அதிகாரம் தெளிவாக குறிப்பிடப்பட்டது.

"நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களில் எந்தவித ஒளிவுமறைவுமற்ற அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டது. நிலம் தொடர்பாக, "ஒவ்வொரு பிராந்தியமும் அதற்குள் உள்ள சகல அரச நிலங்களையும் சுவீகரித்து பிராந்தியப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களுக்காக பிராந்திய நிர்வாகத்தின் வசம் வைத்திருக்க முடியும் என்றும் பொலிஸ் அதிகாரம் குறித்து, "ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்திய பொலிஸ் சேவை இருக்கும், அதன் ஆணையாளர் பிராந்திய அமைச்சரவையின் உடன்பாட்டுடன் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்" என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதேபோன்று , நிதி விடயத்தில் பிராந்தியத் திரட்டு நிதியத்தின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் அளவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்த முன்மொழிவுகளை ஒரு அரசியல் தீர்வாக நடைமுறைப்படுத்துவதற்கான அதன் கடுமையான எதிர்ப்பை விடுதலை புலிகள் இயக்கம் கலாநிதி நீலன் திருச்செல்வத்தை கொடூரப் படுகொலை செய்ததன் மூலம் வெளிப்படுத்தியது. இது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணி உரிமையாளர்கள் தவறிழைத்துவிட்டார்கள் இது குற்றவாளிகள் எழுதும் தீர்ப்பு!



கந்தையா
அருந்தவபாலன்

தையிட்டியில் பௌத்த விகாரையொன்றைக் கட்டுவதற்கும் அதனை விரிவுபடுத்துவதற்குமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தனியார் காணிகளை இனங்கண்டு அளவீடு செய்வதற்காகத் திட்டமிட்டிருந்த நடவடிக்கை இரண்டாவது முறையாகவும் தடைப்பட்டு விட்டது. அரச விடுமுறை நாள் ஒன்றில் திடீரென காணி உரிமையாளர்களை அழைத்து அடுத்துவரும் நாளில் காணி அளவிடப்படும் எனக்கூறிய யாழ் மாவட்ட அரச அதிபர் அதற்காகத் தையிட்டியில் மக்களைக் காத்திருக்க வைத்துவிட்டு காலதாமதமாக அவ்விடத்துக்கு வருகை தந்து அளவீட்டு நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் அறிவுறுத்தலை ஒப்புவித்துவிட்டுச் சென்றதுடன் முதலாவது அளவீட்டு முயற்சி தடைப்பட்டது.

பின்னர் கடந்த 29 ஆம் திகதி திட்டமிடப்பட்ட அளவீட்டு முயற்சி அங்கு வருகை தந்திருந்த காணி உரிமையாளர்களின் நியாயமான ஐயங்களின் அடிப்படையில் எழுந்த கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத அல்லது நிறைவேற்ற விரும்பாத அரசாங்க அதிகாரிகளின் செயற்பாடுகளால் இரண்டாவது தடவையும் தடைப்பட்டுவிட்டது. ஆனால் இத்தடைக்கு நியாயமற்ற நிபந்தனைகளை முன்வைக்கும் காணி உரிமையாளர்களே பிரதான காரணம் என அரச அதிகாரிகள் மற்றும் அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றித் தனது மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய நிலையிலுள்ள வலி வடக்குப் பிரதேச சபையின் தவிசாளரும் குற்றஞ்சாட்டுவதைக் காணமுடிகிறது. அதுமட்டுமன்றி காணி உரிமையாளரை இத்தகைய தவறான நடவடிக்கைகளுக்குத் தள்ளுவது தமிழ்த் தேசிய முன்னணியும் கஜேந்திரகுமாருமே என்றும் அவர்கள் கூறுவதையும் காணமுடிகிறது. உண்மையில் இவ்விடயத்தில் தவறிழைப்பவர் யார்? அல்லது குற்றஞ்சாட்டப்படவேண்டியவர் யார்?



சட்டரீதியற்ற திஸ்ஸ விகார நிர்மாணம் தொடர்பான நடவடிக்கைகள் யுத்தம் நிறைவுபெற்று ஒரு தசாப்தத்தின் பின் 2018 ஆண்டுக்கும் 2023ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதேச சபை உட்பட தொடர்புடைய எந்தவொரு திணைக்களங்களிடமிருந்தும் தேவையான ஒப்புதல்கள் எவையும் பெறப்படாது, முற்றுமுழுதாகப் பிறருரித்துக் காணிகளை அத்துமீறி கையகப்படுத்தி அடாத்தாக மேற்கொள்ளப்பட்ட தொரு நிர்மாணம் என்றவகையில் இது சட்ட விரோதமானது. இந்தச்சட்டரீதியற்ற நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் வேறு யாருமல்லர். அன்பையும் அறத்தையும் ஒழுக்கத்தையும் போதித்த புத்தனின் போதனைகளைச் செய்வதாகச் சொல்லும் பௌத்த துறவிகள்தான். அதற்கு அனுசரணை வழங்கியவர்கள் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய அரச அதிகாரிகள், காவல்துறை மற்றும் படைத்துறை போன்ற அரச பணியாளர்கள். இது வேலியே பயிரை மேய்ந்த கதை. தொடக்கத்தில் இச்சட்டரீதியற்ற விகாரைக்கான அடிக்கல் 2018 ஆவணி 22 ஆம் திகதி, நல்லாட்சி என்று அவர்களே அழைத்துக்கொண்ட மைத்திரி ரணில் ஆட்சிக்காலத்தில் அவர்களின் வடக்குக்கான ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அவர்களினால் இடப்பட்டது. அக்காலத்தில் அரச அதிபராக இருந்தவர் தற்போதைய ஆளுநர் வேதநாயகன் என்பதும், தையிட்டி அமைந்துள்ள வலிவடக்குப் பிரதேச சபையின் அப்போதைய தலைவராக இருந்தவர் இப்போதும் தலைவராக இருக்கும் சுகிர்தன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி உத்தியோகப்பற்றற்ற துணைப்பிரதமர் சுமந்திரன் என்று சொல்லப்பட்ட காலமும் இதுதான். பின்னர் தற்போது உயர்ந்து நிற்கும் தூபி அல்லது தாதுகோபத்திற்கான அடிக்கல் 2021 ஜனவரி 30 ஆம் திகதி ஜனாதிபதி கோதாபயவின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தளபதி சவேந்திரசில்வாவினால் இடப்பட்டது. இராணுவத்தின் பங்களிப்புடன் கட்டுமாணம் மிகவேகமாக நடைபெற்று 2023 மே 25 இல் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

தமிழ் பாரம்பரிய வாழ்விடங்களை அபகரிப்பதற்காக வழமையாகச் பௌத்த சிங்கள பேரினவாதிகளால் புனையப்பட்டுவரும் வழமையான கதைகளின் தொடர்ச்சியே தையிட்டி தொடர்பாகவும் முன்வைக்கப்படுகிறது. சங்கமித்த வெள்ளரசு மரக்கிளையுடன் இலங்கைக்கு வருகை தந்தபோது தையிட்டியில் ஓய்வு எடுத்துக் கொண்டதாகவும் பின்னர் அவர் மன்னன் தேவநம்பிய தீசனைச் சந்தித்தபோது தான் ஓய்வெடுத்த தையிட்டியில் ஒரு விகாரையை கட்டுமாறு கேட்டுக்கொண்டதாகவும் அதற்கமைய அம்மன்னனால் கட்டப்பட்ட புனிதத்தலமே தையிட்டி திஸ்ஸ விகாரை என்று முன்னாள் கடற்படைத் தளபதியும் அரசியல்வாதியுமான சரத் வீரசேகர போன்ற தீவிர பேரினவாதிகள் கதையளந்து வருகின்றனர். ஆனால் அதற்கான உறுதியான வரலாற்றாதாரங்கள் எவையுமில்லை.

தையிட்டியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு சற்றுத் தொலைவில் ஒரு காணியில் 1946 ஆம் ஆண்டிலிருந்து பேக்கரி போன்ற சில தொழில்களில் ஈடுபட்டுவந்த சிங்கள பௌத்த குடும்பத்தினர் சிலர் வழிபடுவதற்கான சிறிய வழிபாட்டு இடமொன்று மட்டும் 1990 இல் தாம் இடம்பெயரும்வரை இருந்ததென்று அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். அந்த வழிபாட்டு இடம் அமைந்த காணிகூட அதன் உரிமையாளரான தமிழரினால் இன்னொருவரிடம் ஈடு வைக்கப்பட்டு மீளமுடியாது நிலையில் அது வேறொருவருக்கு விற்பனை மூலம் கைமாறப்பட்டு பின்னர் பௌத்த வழிபாட்டுக்குக் கையளிக்கப்பட்டதாக அம்மக்களால் கூறப்படுகிறது. குறித்த இக்காணிக்கான உரித்து ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக குறித்த தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் நயினாதீவு நாகவிகாரை ஆகியவற்றின் விகாராதிபதியான நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக தேரர் கூறுகிறார். அதுமட்டுமன்றி தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரை தனியார் காணிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளது என்றும் அது சட்டத்துக்குப் புறம்பானது என்றும் கூறுவதுடன் அத்தவறான செயலைச் செயததற்காக குறித்த விகாரைக்கு தற்போது பொறுப்பாக உள்ள நந்தராம தேரர் மீது அவர் குற்றமும் சுமத்துகிறார். அத்துடன் இக்கருத்தை யாழ்ப்பாண நாகவிகாரையின் அதிபதி மீகஹஜந்துரே விமலநாயக்க தேரரும் உறுதிப்படுத்துகிறார். இந்த வகையில் தமிழ்த் தரப்புகள் மட்டுமன்றி குடாநாட்டில் நீண்டகாலமாக இருக்கும் முக்கிய விகாராதிபதிகளே தற்போது விகாரை அமைக்கப்பட்டிருக்கும் காணி அதற்குச் சொந்தமானது இல்லை என்று உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே இப்பிரச்சினை வழமையான குடிசார் காணிப் பிணக்குடன் தொடர்புபட்டதொன்றாகும். அதாவது அடிப்படையில் காணியின் உண்மையான உரித்தாளர்களுக்கும் காணியைச் சட்டவிரோதமாக கையகப்படுத்தியவருக்கும் இடையிலான ஒரு குடிசார் பிணக்கு மட்டுமே.




> **வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுவதை விடுத்து தன்னையும் தனது கட்சியின் செயல்பாடுகளையும் சுயவிமர்சனம் செய்தால் உண்மையில் யார் தவறிழைத்துள்ளார்கள் என்பதை தெரியவரும்.**

இவ்வாறான காணிப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தேவையான சட்டங்களும், நடைமுறை வழிகாட்டுதல்களும் இலங்கையில் தாராளமாகவே உள்ளன. காணிப் பிணக்குகள் தொடர்பான குடிசார் சட்டங்கள், வடக்குக்கான தேசவழமைச் சட்டம், காணி அளவிடுவது தொடர்பான 17-2002 பிந்திய நிலஅளவீட்டுச் சட்டம் மற்றும் உள்ளூராட்சி சட்டம் போன்றன இருக்கும்போது அவற்றிற்கமைய இப்பிணக்கினை அணுகுவதே அரசாங்கத்தினதும் தொடர்புபட்ட ஒவ்வொரு அதிகாரிகளினதும் கடமையாகும். அவ்வாறே நாட்டில் ஏனைய பகுதிகளில் எல்லா விடயங்களிலும் இடம்பெற்று வருகின்றன. நடைமுறைகள் அப்படியிருக்க இந்தப் பிணக்கில் மட்டும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அப்பாற்பட்ட நடவடிக்கைகள் ஏன்? போதைப்பொருட்கள் கடத்திய குற்றம் தொடர்பாக தேரர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கேள்விக்கு அமைச்சரும் ஊடகப் பேச்சாளருமாகிய நளிந்த திசநாயக்க அண்மையில் பதிலளிக்கும்போது சட்டம் அனைவர்க்கும் சமமானது என்று கூறினார். அவ்வாறாயின் தையிட்டியில் மட்டும் சட்டத்தை மீறியவர்க்கு சார்பாக அரசாங்கமும் அதன் ஆளணியினரும் செயற்படுவது ஏன்? ஏனெனில் இந்த நாட்டில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகள் என்று வரும்போது அங்கு சட்டங்களைவிட பெரும்பான்மையினரின் விருப்பமே மேலோங்கும் என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. அதிலும் பௌத்தமும் தேரர்களும் சட்டத்தை விட மேலானவர்கள். வெசாக் காலத்தில் வரும் தமது பண்டிகையை இஸ்லாமியர் எவ்வாறு கொண்டாடவேண்டும் என்பதை மகாநாயக்கர்களே தீர்மானிப்பார்கள் என்று மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாகக் கூறிப் பதவியைப் பெற்ற முற்போக்குத் தோழர்களின் பதில் இதற்கான அண்மிய உதாரணம்.

சரி, அரசாங்கம் கூறுவது போல இக்காணிப்பிரச்னையில் பௌத்த விகாரை தொடர்புபட்டுள்ளதால் ஒரு விசாரணைக்குழு மூலம் சுமுகமாகத் தீர்வு காணப்படுவது ஆரோக்கியமானது என்ற வாதத்தை ஏற்றுக் கொள்வோம். அவ்வாறாயின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின்கீழ் இதனை அமைத்திருக்க வேண்டுமல்லவா? இதில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அல்லவா முக்கியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பௌத்த சாசன அமைச்சு அதிகாரிகள் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? பௌத்த சாசன அமைச்சில் பதிவு செய்யப்படாத சட்டரீதியற்ற வழிபாட்டு இடத்துக்கு அவ்வமைச்சு அதனது பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டிய அவசியம் என்ன? இவ்விடயத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட குருந்தூர் விகாரையின் தேரர் தொடர்புபடுவது ஏன்? இக்குழுவில் காணி உரிமையாளர்களின் பிரநிதிகளும் இடம்பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் எந்தவொரு கூட்டத்துக்கும் அழைக்கப்படவில்லை என்பதுடன் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், முடிவுகள் எல்லாமே அவர்களுக்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதி, அதாவது சட்டத்தை மீறிய தேரர் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்ற முடியும், ஆனால் வாதிகள் அதாவது சட்டத்துக்கு அமைய நடப்பவர்கள் அதில் பங்குபற்ற முடியாது. அப்படியானால் இந்த விசாரணைக்குழு நேர்மையாக நடக்கும் எனக் காணி உரிமையாளர்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இக்குழுவின் முடிவில் காணி உரிமையாளர்கள் எவ்வகையில் நம்பிக்கை கொள்ள முடியும்?

காணி அளவீடு தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை நீதியானதா? இக்காணிப்பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டு. ஒன்று காணி உரிமையாளர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள். இவர்கள் வாதிகள். இரண்டாவது காணியைச் சட்டத்துக்கு முரணாக அடாத்தாகக் கையகப்படுத்தி விகாரையை கட்டியிருக்கும் நந்தராம தேரர். இவர் பிரதிவாதி. காணிப் பிணக்கொன்றில் வாதிகள் தமது உரித்தை நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை முன்வைக்கும் அதேவேளை பிரதிவாதி இல்லை, அது தவறு, அக்காணி எனக்கே உரித்தானது என்பதை நிறுவுவதற்கான ஆவணங்களை முன்வைக்க வேண்டியதும் அவசியமாகும். இங்கே வாதிகளிடம் ஆவணங்களை முன்வைக்குமாறு கோருவதும் அதனைச் சரிபார்க்கும் அரச தரப்புகளும் குறிப்பிட்ட விசாரணைக் குழுவும் பிரதிவாதியிடம் ஏன் அவரின் உரிமையை நிலைநாட்டுவதற்கான ஆவணங்களைக் கோரவில்லை. மகாசங்கத்துக்கு வழங்கப்பட்ட காணிகளை யாரும் உரிமை கோரமுடியாதென்றும் மேலும் விகாரைக்குச் சொந்தமான ஆறு ஏக்கர்காணி கையகப்படுத்த வேண்டும் எனக் கூறும் நந்தராம தேரர் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமில்லையா?

குறித்த திஸ்ஸ விகாரையின் அங்கீகரிக்கப்பட்ட விகாராதிபதியும், குறித்த விகாரைக்குரிய 20 ஏக்கர் காணிக்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் கட்சிகளால் சூறையாடப்பட்டுள்ள தொழிலாளர் தினம்!

பனங்காட்டான்

இன்னொரு மே தினமும் வந்து போய்விட்டது. இது தான் சர்வதேச தொழிலாளர் தினம் என்பது மறக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டுமே மாதத்தின் முதல் நாள் மே தினம் என்றவாறாக மாற்றப்பட்டு விட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை தொழி லாளர் தினம் என்றமே முதலாம் நாள் அரசியல் கட்சிகள் தங்களுக்கான ஆட்பலத்தைக் காட்டவும், கூட்டவும் ஆக்கி விட்டன என்பதுவே வரலாறாகி வருகிறது.

1886ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி தொழிலாளர்கள் தங்களுக்கு எட்டு மணி நேர பணியைக் கோரி போராட்டம் சிக்காகோவில் நடத்தி வெற்றி பெற்றனர். உலகளாவிய சோசலிச - மார்க்சிஸ சக்திகள் இந்த நாளை நிலைநாட்டும் முகமாக 1889ல் தொழிலாளர் தினமாக பிரகடனம் செய்து அனைவருக்கும் விடுமுறை நாளாக்கியது.

இந்த வரலாறு இன்று மேதினம் என்று கொண்டாடுபவர்களில் எவ்வளவுபேருக்கு தெரிந்திருக்கும்? இலங்கையின் முன்னைய சகல அரசாங்கங்களிலும் தொழில் அமைச்சரென தனியொருவர் இருப்பார். மே மாதம் முதலாம் திகதி ஊடகங்களில் இவரது தொழிலாளர் தின செய்தி வாழ்த்தாக வெளிவரும். இப்போது தனியாக தொழில் அமைச்சர் என்று எவரும் இல்லை. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புஎன்றுபெயரிடப்பட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டு தொழிலாளர் நலன், அவர்களின் தொழில் பாதுகாப்பு, சம்பள உயர்வுக்கான உத்தரவாதம் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிட்டது. தொழிலாளர் தினம் என்பது காணாமல் போய், அரசியல் கட்சிகளுக்கான ஆட்சேர்ப்பு நாளாக இது மாற்றப்பட்டு விட்டது.



> தொழிலாளர் தினம் என்பது எவ்வாறு மே தினமாக மாற்றப்பட்டதோ, அவ்வாறே பௌத்தர்களின் வெசாக் தினம் மே முதலாம் திகதியை மாற்றும் அரசியல் மயப்பட்டுள்ளது. 1969ம் ஆண்டு வெசாக் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் எவ்வாறு தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது என்பதை 57 ஆண்டுகளின் பின்னர் இப்போது ஒரு தடவை நினைவுக்குட்படுத்த வேண்டியது, வரலாற்றுத்

சில வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. தனது மேதினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடியது. இதன் தலைவர்கள் தங்கள் பட்டாளங்களுடன் செஞ்சட்டை அணிந்து கொடிகளை ஏந்தியவாறு வீதி வழியாக கோசத்துடன் சென்றனர். இந்த ஊர்வலத்தில் தமிழரசுக் கட்சி எம்.பியாகவிருந்த சுமந்திரனும் முன்வரிசையில் கலந்திருந்தார். இந்த ஊர்வலத்தின் அறுவடையாக ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி கடந்த பொதுத்தேர்தலில் மூன்று எம்.பிக்களை முதல்முறையாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெற்றது. இது மே தினத்துக்கான இன்னொரு வரலாறு.

இதனை எழுதும்போது, 1960-70களில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற தொழிலாளர் தினஊர்வலங்கள் நினைவுக்கு வருகின்றன. அப்போது தமிழர் மத்தியில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், சீன கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவையே தொழிலாளர் தின கொண்டாட்டங்களை இங்கு நடத்தின. இவை ஒன்றுடன் ஒன்று மோதாத வகையில் இவைகளின் ஊர்வலத்துக்கான பாதைகளும், கூட்டத்துக்கான இடங்களும் பொலிசாரால் நிர்ணயிக்கப்படும்.

சீன கம்யுனிஸ்ட் கட்சியின் ஊர்வலங்கள் எப்போதும் கவர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் இருக்கும். மிக அதிகமானோர் இதிலேயே பங்குபற்றுவர். இப்பத்தி எழுத்தாளர் ஓர் ஊடகர் என்ற வகையில் இதனை செய்தியாக எழுதியதுண்டு. இந்த ஊர்வலங்களில் ஒலிபெருக்கி மூலம் முழங்கப்படும் சுலோகங்கள் பார்ப்போரை சுண்டியிழுப்பதாக அமைந்திருக்கும்.

ஊர்வலத்தின் முன்வரிசையில் செல்பவர் ஒலிவாங்கியில் சுலோகத்தின் முதல் இருவரிகளைச் சொல்ல பின்னால் செல்பவர்கள் மிகுதி இருவரிகளையும் வானதிரச் சொல்வர். சமகால அரசியல், மக்கள் வாழ்வியல் சம்பந்தப்பட்டவையாக இவை அமைந்திருப்பதால் பெரும் கூட்டம் இதனைக் கேட்பதற்கு வீதிகளில் கூடியிருக்கும்.

யாழ்ப்பாணம் பிரதானவீதியில் தமிழ்க் காங்கிரஸ் அலுவலகத்துக்கு முன்னால் ஊர்வலம் செல்லும்போது முன்னால் செல்பவர் - விண்ணன் பொன்னன் - என்று சொல்ல, பின்னால் செல்பவர்கள் - பண்ணினதென்ன - என்று முடிப்பர். தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் கூட ரசிப்பதாகவே இது அமைந்திருக்கும்.

தேநீர் கடைகளின் முன்னால் ஊர்வலம் செல்லும்போது - போகட்டும் போகட்டும் - என்று முன்னால் செல்பவர் சொல்ல, பின்னால் செல்பவர்கள் - போத்திலும் பேணியும் - என்பர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு போத்திலிலும், உடைந்த பேணிகளிலும் தேநீர் வழங்குவதை கண்டிக்கும் சுலோகம் இது.

இவ்வாறு பெயர் பெற்றசீனக் கம்யுனிஸ்ட் கட்சியின் இயங்கு தலைவராக நீண்டகாலம் இருந்தவர் (அமரர்) கே. ஏ. சுப்பிரமணியம். இவருக்குச் சவாலாக அமைந்தது 1969ம் ஆண்டு தொழிலாளர் தினம். இதே தினத்தில் பௌத்தர்களுக்கான வெசாக் தினமும் வந்ததால், அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசின் பிரதமர் டட்லி சேனநாயக்க தொழிலாளர் தினத்தை மேமாதம் 2ம் திகதி என்று பிரகடனம் செய்தார். சிங்கள கட்சிகள் மட்டுமன்றி டட்லியின் தேசிய அரசை ஆதரித்து வந்த தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும் கூட இதனை ஏற்றுக்கொண்டன. ஆனால், சீனக்கம்யுனிஸ்ட் கட்சி மட்டும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், மேமாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறுமென இக்கட்சியின் தலைவர் கே. ஏ.சுப்பிரமணியம் அறிவித்திருந்தார். அப்போது வடமாகாண பொலிஸ் அதிபராக ஆர்.சுந்தரலிங்கம் பணியாற்றிக் கொண்டிருந்தார். பொது மக்களோடும், ஊடகங்களோடும் நல்லுறவு பேணியவராக இவர் இருந்தும் சீனக் கம்யுனிஸ்ட் கட்சியினரின் தொழிலாளர் தின ஏற்பாடுகள் பற்றி எதனையும் இவரால் கண்டறியமுடியவில்லை.

இக்கட்சிஅக்காலத்தில் சங்கானையில் நிற்சாமம் என்ற இடத்திலும், கொடிகாமத்தில் மந்துவிலிலும், சுன்னாகத்திலும் வலுப்பெற்றிருந்தது. இதனால் இவ்விடங்களிலேயே தொழிலாளர் தின நிகழ்வு இடம்பெறலாம் என்ற சந்தேகத்தில் வேறு மாகாணங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட பொலிசார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். யாழ். நகர் பகுதியில் பொலிஸ் கண்காணிப்பு குறைவாகவே இருந்தது.

அன்றைய தினம் பிற்பகல் சுமார் ஐந்து மணியளவில் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரிலும் அதன் முன்னாலுள்ள வின்சர் தியேட்டரிலும் பகல் இரண்டு மணி படக்காட்சி (மெட்னி ஷோ) முடிந்து வெளியேவந்த ஆயிரக்கணக்கானோர் திடீரெனதங்கள் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குட்டைகள் அளவான சிவப் புத்துணிகளை உயர்த்திப் பிடித்தவாறு, கோசங்கள் எழுப்பிக் கொண்டு தொழி லாளர் தின ஊர்வலத்தை ஆரம்பித்து அனைவருக்கும் அதிர்ச்சி கொடுத்தனர்.

கே.ஏ.சுப்பிரமணியம் எங்கிருந்து வந்தாரோ தெரியாது, ஊர்வலத்தின் முன்னால் பாரிய பதாதையுடன் ஓட்டமாகச் செல்ல, ஊர்வலத்தினர் சிவப்புக் கொடிகளை ஏந்தியவாறு அவரின் பின்னால் நகரின் மையப் பகுதிக்குள் நுழைந்தனர். சில நிமிடங்களில் மலாயன் கபேயைத் தாண்டி முட்டாசுக் கடை சந்தியூடாக முற்றவெளியை நோக்கி அண்மிக்கையில் வாகனங்களில் கொண்டு வரப்பட்ட பொலிசார் இறக்கப்பட்டனர். அவர்களின் குண்டாந்தடித் தாக் குதலால் ஊர்வலத்தின் ஒருபகுதி சிதறியது.

இந்தத் தாக்குதலில் திரு. சுப்பிரமணியம் மோசமாகக் காயப்பட்டு யாழ்ப்பாணம் பொது வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டாராயினும் பொலிஸ் காவலிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

அதே சமயம், தங்களுடைய குறியை ஊர்வலகாரர் மறந்துவிடவில்லை. நல்லூார் வீரமாகாளிஅம்மன் கோவிலை நோக்கிச்சென்ற இவர்கள் அங்குசிறு கூட்டம் நடத்தி உரையாற்றிவிட்டு, தொழிலாளர் தின பிரகடனத்தை வாசித்தபின் கலைந்தனர். இந்த நிகழ்வு, அன்றைய டட்லி சேனநாயக்க அரசுக்கும், பௌத்த மத பக்தர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்தது. இலங்கை ஊடகங்களை விட இந்தியஊடகங்கள் இதற்கு அதி முக்கியத்துவம் கொடுத்திருந்தன. பி.பி.சி. மும்மொழிகளிலும் இச்செய்திக்கு அன்றிரவு பிரபல்யம் கொடுத்தது.

இதனை விபரமாக இங்கு குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. இந்த வருடமும் வெசாக் வாரத்திலேயே தொழிலாளர் தினமும் அமைந்தது. ஐக்கியமக்கள் சக்தியின்மேதினநிகழ்வில் தங்களோடு இணையுமாறு அதன் தலைவரான சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில தினங்களுக்கு முன்னர் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை நிராகரித்த ரணில், இதற்குத் தெரிவித்த காரணம் பின்வருமாறு: 'ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி இன்று வெசாக் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள பல நாடுகள் மே முப்பதாம் திகதியில் தொழிலாளர் தினத்தை அனுஷ்டிக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியும் அவ்வாறே' என்று சஜித் பிரேமதாசவுக்கு அனுப்பிய பதிலில் ரணில் சுட்டியுள்ளார்.

1969ல் தொழிலாளர் தினத்தை மே மாதம் 2ம் திகதிக்கு மாற்றிய டட்லி சேனநாயக்கவின் ஐக்கியதேசிய கட்சியின் இன்றைய தலைவர் ரணில் விக்கிரம சிங்க என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. மதம் பிடித்த அந்த அரசியல் போக்கு இன்றும் அவ்வாறே தான்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தோற்கக் கூடாத போரில், தோற்கும் போது!



-யதீந்திரா

**கடந்த காலத்தை** உற்றுநோக்காமல் இன்றைய அரசியல் சிக்கல்களை புரிந்துகொள்ள முடியாது. எப்போதேல்லாம் நாம் கடந்த காலத்தை புனிதமாக்க முற்படுகின்றோமோ, அப்போதெல்லாம் நிகழ்காலத்தின் நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுவோம். ஏனெனில் புனிதவாதங்கள் சவால்களை எதிர்கொள்ளும் வழிகளை ஒரு போதும் காண்பிக்காது. ஈழத் தமிழர் அரசியலின் இன்றைய அனைத்து சிக்கல்களும் அதன் கடந்த காலத் தோல்வியின் விளைவு. தோல்விக்கு எவ்வாறான காரணங்களையும் கூறலாம் - மற்றவர்கள் மீது விரல் நீட்டலாம் - அவர்களை அனியாயக் காரர்களாக கதைகள் புனையலாம் ஆனால் அவற்றால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை ஏனெனில் வரலாறு வென்றவர்களுக்குரியது. தோற்றவர்கள் எவ்வாறான கதைகளையும் கூறலாம் ஆனால் அந்தக் கதைகளுக்கு பெறுமதியிருக்கப் போவதில்லை. இதனால்தான் போருக்கு சென்றால் எப்படியாவது வெல்ல வேண்டும் என்பது ஒரேயொரு தெரிவாகின்றது. வெல்ல முடியாத போர் என்று தெரிந்து கொண்டால், போரிலிருந்து விலகிக் கொள்வதும் ஒரு போரியல் தந்திரம்தான்.

யோசி கோஹன் இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாட்டின் முன்னைநாள் தலைவர் ஆவார். 2016-2021 வரையான காலப்பகுதியில் பொறுப்பில் இருந்தார். “சுதந்திரத்தின் வாள்: இஸ்ரேல், மொசாட் மற்றும் இரகசியப் போர்” என்னும் தலைப்பில் தனது அனுபவங்களை ஒரு நூலாக வெளியிட்டிருக்கின்றார். ஒரு வேளை, அவர் எதிர்காலத்தில் இஸ்ரேலின் பிரதமராக வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நூலின் ஆரம்பத்தில் அவர் இவ்வாறு எழுதுகின்றார். அனைத்து யுத்தங்களும் முழுமையான வெற்றியில் முடிவடைவதில்லை அதே போல் முழுமையான சரணடைவிலும் முடிவுறுவதில்லை - ஆனால் இஸ்ரேல் ஒரு யுத்தத்திற்கு சென்றால் அதில் வெற்றிபெற்றே ஆக வேண்டும். ஏன் அப்படி - ஏனெனில் வெற்றிபெற்றால் மட்டும்தான் இஸ்ரேல் என்னும் ஒரு நாடு மத்திய கிழக்கில் இருக்க முடியும்.

ஈழத் தமிழர் அரசியல் எதிர்கொண்ட இறுதி யுத்தத்தின் நிலையும் இப்படியான ஒன்றாகத்தான் இருந்தது. மேற்குலக தரகர் அரசியலின் விளைவான சமாதான உடன்பாட்டிற்கு பின்னர், மீண்டுமொரு யுத்தத்திற்கு செல்வதற்கு எவ்வித சாத்தியங்களும் இருந்திருக்கவில்லை. அதனையும் மீறி, யுத்தத்திற்கு சென்றால் வென்றேயாக வேண்டும் - இல்லையேல் இருப்பதை அப்படியே பேணிக்கொண்டு தப்பித்துக்கொள்ளும் தந்திரம் புரிந்திருக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைமை யுத்தத்தை தெரிவு செய்தது. அதன் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு முன்னால் ஒரேயொரு தெரிவு மட்டுமே இருந்தது. அதாவது, வெற்றிபெற்றே ஆக வேண்டும். ஏனெனில் வெற்றி இல்லையேல் புலிகள் இருக்க மாட்டார்கள். இறுதியில் அதுதான் நடந்தது.

இறுதி ஈழப் போரைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் தோல்வி என்பது ஈழத் தமிழர் அனைவரதும் தோல்விதான். இன்று ஒரு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குக் கூட அரசாங்கத்திடம் இரந்து நிற்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் முடியாது என்று கூறினால், அரசாங்கத்தை இறங்கிவரச் செய்வதற்கு தமிழரிடம் எதுவுமில்லை. இந்த எதுவுமில்லை என்பதுதான் அரசியலிலேயே மிகவும் மோசமான கையறு நிலை. இந்த இடத்திலிருந்து தமிழர் அரசியலை உற்று நோக்கினால், இது எந்தளவிற்கு மீண்டு எழ முடியாத தோல்வி என்பதை புரிந்து கொள்வது கடினமானதல்ல. ஒரு தோல்வியின் பின்னரான பழங் கதைகள் அனைத்துமே இயலாமையின் வெளிப்பாடாக இருக்குமே அன்றி, செயலுக்கான தூண்டுதலாக இருக்காது. ஏனெனில் செயல் மீது அச்சம் கொண்ட ஒரு தலைமுறையைத்தான் தோல்வி உற்பத்தி செய்யும். இன்று தமிழ்த் தேசிய அரசியல் உரையாடல்கள் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை நோக்கினால் இதனை புரிந்து கொள்வது கடினம் அல்ல.

> **விடுதலைப் புலிகள் தோற்கக் கூடாத போரில் தோற்றதன் விளைவுதான் இன்றைய அரசியல். இந்தப் புரிதலின்றி அரசியலை அணுகினால் அதன் விளைவு எப்போதும் பூச்சியம்தான். இந்தப் புரிதலின்றி அரசியலை கையாள முற்பட்டதன் காரணமாகத்தான் கடந்த பதினேழு ஆண்டுகளாக போகுமிடம் தெரியாத அரசியலுக்கு தலைமை தாங்குவதற்காக பல கட்சிகளாக பிளவுற்றிருக்கின்றனர்.**

பல அரசியல் கட்சிகள் - அந்த அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே அரசியல் உரையாடல்கள் இடம்பெறுகின்றன. இந்தக் கட்சிகள் சரியான பாதையில் பயணிக்கவில்லை என்னுமடிப்படையில் அறிவுரைகளும் இடம்பெறுகின்றன. ஆனால் ஒட்டுமொத்தமாக நோக்கினால் எவரிடமும் எங்கு செல்வது என்னும் திசைகாட்டி இல்லை. திசைகள் பற்றிய கற்பனையே இருக்கின்றது. ஒரு தோல்வியின் பின்னரான அரசியல் இப்படித்தான் இருக்கும். இதுதான் தோற்கக் கூடாத அரசியலில் தோற்றதன் விளைவு.

ஈழத் தமிழர் அரசியலில் எப்போதுமே படித்தவர், பாமரர் என்னும் இரண்டு புரிதல் இருந்தது. அரசியல் கோட்பாடுகள் அறிந்தவர்கள் தங்களை முன்னேறிய பிரிவினர் என்றும் அடையாளப்படுத்திக் கொண்டனர். மிதவாத அரசியலைப் பொறுத்தவரையில் சட்டம் பயின்றவர்கள், ஆங்கிலப் புலமை உள்ளவர்களே முன்னேறியவர்கள். அவர்களே அரசியலை வழிடநடத்தும் ஆற்றல் கொண்டவர்கள். ஏனையவர்கள் அனைவரும் பாமரர்கள். ஆனால் அவ்வாறான படித்தவர்கள் அனைவருமே சிங்கள ராஜதந்திரத்திற்கு முன்னால் படுமோசமாகத் தோற்றுப் போனதே இதுவரையான வரலாறு.

அப்புக்காத்துக்களின் தோல்வியானது, புதிய முன்னேறிய பிரிவினரின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. சட்டப் புத்தங்களுக்குள்ளால் அரசியலை புரிந்து கொண்ட ஒரு தமிழ் தலைமுறைக்கு பதிலாக, சோவியத் பாணி சிகப்பு மட்டைப் புத்தகங்கள், பாலஸ்தீன, லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க புரட்சியாளர்களின் சிந்தனைகளின் வழியாக உலகத்தை புரிந்து கொள்ள முற்பட்ட தலைமுறையொன்று உருவாகியது. அந்தத் தலைமுறை, ஒரு புரட்சியின் ஊடாக அனைத்தையும் தலைகீழாக்கலாம் என்னும் நம்பிக்கையை, தெருக்கள் தோறும் பரப்ப முற்பட்டது. அதுவும் தோல்வியில்தான் முடிவுற்றது. அன்றைய சூழலில், இலங்கை இராணுவத்தில் இருந்தவர்களின் எண்ணிக்கையை விடவும் தமிழ் இயக்கங்களில், இருந்தவர்களின் எண்ணிக்கை பல மடங்காக இருந்தது. ஆனாலும் போர் வெற்றியை பறைசாற்ற முடியவில்லை. ஆங்காங்கே தாக்குல்களில் சாகசங்கள் காண்பிக்கப் பட்டதே அன்றி, யுத்தத்தை வெல்ல முடியவில்லை.

இறுதியில் தனித்து தங்களால் முடியும் என்னும் அடிப்படையில் செயற்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கமும், யுத்த களங்களில் வென்று, யுத்தத்தில் தோல்வி அடைந்து, முள்ளிவாய்க்கால் அவலத்தை விட்டுச் சென்றது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான சூழலில் உண்மையில், போராட்ட வகைப்பட்ட தனித்துவமான அரசியலொன்றை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் முற்றிலும் இல்லாமால் போய்விட்டது. இதனை சரிவர புரிந்திருந்தால், இன்று பல கட்சிகளாக, பல நிலைப்பாடுகளாக சிதறிப் போகும் அரசியலை முளையிலேயே கிள்ளியெறிந்திருக்கலாம் ஆனால் ஆரம்பம் சறுக்கியதால், தொடர்ந்தும் சறுக்கிக் கொண்டிருக்கும் அரசியலே, தமிழர் அரசியலாக இருக்கின்றது. ஒரு வாய்ப்பிருந்தது - அதாவது, 2009இல் ஒரு பேரவலம் ஏற்பட்ட போது, விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அதன் கதைகளை முற்றிலுமாக தமிழர் அரசியலில் நீக்கிவிட்டு, ஒரு புதிய ஜனநாயக முகத்தை வழங்கும் வகையிலான மக்கள் அரசியலை முன்னெடுத்திருந்திருந்தால் ஒப்பீட்டடிப் படையில் இன்று ஆரோக்கியமான அரசியல் சூழலை எதிர்கொண்டிருக்கலாம். ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பு போன்றதொரு அமைப்பு வெற்றிபெற்றால் மட்டுமே, அதனால் சீவிக்க முடியும் - இல்லாவிட்டால் ஒரு சிறிய வாய்ப்பும் அவர்களுக்கு இருக்காது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கடந்தகால நடவடிக்கைகளும் அதன் விளைவுகளும் எக்காலத்திற்குமான தடையாகவே இருந்திருக்கும். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தாக்குப்பிடித்திருந்தால், அதன் பின்னர் ஏற்படும் பிராந்திய மற்றும் உலகளாவிய மாற்றங்களின் கீழ் தப்பிப்பிழைப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைத்திருக் கலாம். அதற்கான உத்தரவாதங்கள் இல்லாவிட்டாலும் கூட, அதற்கு எதிர்காலம் உண்டு - சில வேளை ஒரு புதிய அரசியல் நகர்விற்கான சூழலை கனியச் செய்திருக் கலாம். புலிகளின் வீழ்ச்சியோடு, அதுவரையான தனிநாடு, உள்ளக வெளியக சுயநிர்ணய மற்றும், சமஸ்டிக் கதைகள் அனைத்துமே முடிவுற்றுவிட்டன.

2009இற்கு பின்னர், இந்த நிலைமையை புரிந்து கொண்டு செயலாற்றக் கூடிய ஆளுமை மிக்க தலைமைகள் இருந்திருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் இருந்தவர்களிடம் அதற்கான ஆற்றல் இருந்திருக்கவில்லை - அவர்கள் நாடாளுமன்றத்தை மட்டுமே ஒரேயொரு தெரிவாகக் காணும் நிலையில் இருந்ததால் அவர்களால் அதற்கப்பால் சிந்திக்க முடியவில்லை. மேலும் சம்பந்தன் போன்றவர்களிடம் வெகுசன அரசியலுக்கு தலைமை தாங்கும் ஆற்றலோ, அரசியல் வாழ்க்கையோ இருந்திருக்கவில்லை - உண்மையில் அப்படியான அரசியல் பார்வை, சம்பந்தன் போன்றவர்களின் அரசியல் மரபணுவிலேயே இல்லாததொரு விடயமும் கூட.

எனவே விடயங்களை பின்நோக்கி பார்த்தால், விடுதலைப் புலிகள் தோற்கக் கூடாத போரில் தோற்றதன் விளைவுதான் இன்றைய அரசியல். இந்தப் புரிதலின்றி அரசியலை அணுகினால் அதன் விளைவு எப்போதும் பூச்சியம்தான். இந்தப் புரிதலின்றி அரசியலை கையாள முற்பட்டதன் காரணமாகத்தான் கடந்த பதினேழு ஆண்டுகளாக போகுமிடம் தெரியாத அரசியலுக்கு தலைமை தாங்குவதற்காக பல கட்சிகளாக பிளவுற்றிருக்கின்றனர். ஒரு பெரும் தோல்விக்கு பின்னரான அரசியல் சூழல் என்பது அடிப்படையில் இப்போது என்ன இருக்கின்றது, ஏதாவது இருக்கின்றதா என்பதிலிருந்தே அதன் அடுத்த கட்டத்தை ஆராய வேண்டும். அப்படித்தான் ஈழத் தமிழர் அரசியலிலும் நடந்திருக்க வேண்டும் - ஆனால் அது நடக்கவில்லை. தங்களின் ஆற்றல் என்ன என்னவென்பதை அறியாத ஒவ்வொருவரும் தங்களின் கற்பனைகளை வெளியிட் டனர். இப்போதும் அது தொடர்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அழகான அந்தப் பனைமரம்



நிலாந்தன்

எனது நண்பர் ஒருவர் சொன்னார், தேனிசை செல்லப்பாவை ஓர் ஈழத் தமிழர் என்றுதான் தன்னுடைய தகப் பனார் நம்பினார் என்று. அந்தளவுக்கு செல்லப்பாவின் குரல் ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமானது.

பாக்கு நீரிணையால் பிரிக்கப்படும் இரண்டு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையே கலைத்துறைப் பிணைப்பு என்று பார்த்தால், சாஸ்த்திரிய சங்கீதமும் பெருமளவுக்குப் பொதுவானது. ஜனரஞ்சக இசையும் பெருமளவுக்குப் பொதுவானது. இதில் ஈழத் தமிழர்களின் ஜனரஞ்சக இசை தனக்கென்று ஒரு தனித்துவமான தடத்தை துலக்கமாக உருவாக்கத் தொடங்கியது, ஈழத்து மெல்லிசைப் பாடல்களில்தான் என்று மெல்லிசைப் பாடகரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் சண்முகலிங்கனும், சேர்.பொன்.இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி ரொபேர்ட்டும் கூறுகிறார்கள். “ஈழத்து மெல்லிசைப் பாரம்பரியம் ஓர் இயக்கமாக வளரவேண்டும் என்று நான் கனவு கண்டேன். ஆனால் பின்னாளில் இயக்க மெல்லிசைப் பாடல்களேகிடைத்தன..”என்றுபேராசிரியர் சண்முகலிங்கன் கூறுகிறார்.

“இலங்கைக்கான இசை மரபினை உருவாக்கவேண்டும் என்ற கருத்தை பாடகரும் மருத்துவப் பேராசிரியருமான பரமேஸ்வரன் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் முன் வைத்ததாக” சண்முகலிங்கன் கூறுகிறார். “1970களில் ஈழத்துக்கான தனித்துவ ஆக்க இசையாக மெல்லிசையை உருவாக்கும் முயற்சியானது, ஆக்க இசைக் கலைஞரான எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களின் நாட்டார் பாடல் நவீனப்படுத்துதலுடனேயே தொடங்குவது இங்கு கவனத்திற்குரியது. இந்த தேடலில் காவலூர் ராஜதுரை, எம்.கே.ரொக்சாமி போன்றோர் பராவுடன் இணைந்திருந்தனர்” என்று சண்முகலிங்கன் கூறுகிறார்.

மெல்லிசைப் பரப்பில் ஈழத் தமிழர்களுக்கு என்று தனித்துவமான ஒரு தடத்தைக் கட்டியெழுப்ப முற்பட்டவர்களில் கண்ணன் மாஸ்டர் முக்கியமானவர். அதே கண்ணன் மாஸ்டர்தான் பின்னர் போர்க்காலப் பாடல்களில் ஈழத் தமிழர்களுக்கேயான ஒரு தனித்துவமானதடத்தைச் சிருஷ்டித்தவர்களில் முதன்மையானவர் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

ஆயுதப் போராட்டதுக்கு முந்திய மிதவாத அரசியலில், இந்திய சினிமாப் பாடல்களே தேர்தல் மேடைகளில் அதிகம் ஒலித்தன. ஆனால் ஆயுதப் போராட்டம் தனக்கென்று ஒரு தனித்துவம்மிக்க இசைத் தடத்தை உருவாக்க விளைந்தது. அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தமிழுக்கு புதிய போர்க்களச் சொற்களை-போர்த் தமிழை-அறிமுகப்படுத்தியது. நவீன தமிழில் கிடைத்த புதிய போர் அனுபவங்கள் இலக்கியமாகின் நாடகமாயின் ஓவியமாகின் இசைப் பாடல்களாயின. அவை மண் மணத்தோடுதனித்துவமான ஒரு புதிய கலை இலக்கியத் தடத்தை உருவாக்கின.

ஈழப் போரோடு எழுச்சிபெற்ற இசைப் பாரம்பரியத்தில் முதலில் கேட்ட குரல்களில் ஒன்று தேனிசை செல்லப் பாவுடையது. செல்லப்பாவின் பாடல்கள் ஒரு புறம் ஈழத் தமிழர்களுக்கேயான தனித்துவமான போர்ப் பாடல் என்ற வகைக்குள் அடங்கும். அதேசமயம் அதுவும் ஈழ-தமிழக இசைப் பிணைப்பின் ஒரு பகுதிதான். இது செல்லப்பாவில் தொடங்கி தமிழகத்தின் வேறு சில பிரபலமான பாடகர்கள், இசைக் கலைஞர்கள், இசைத் தொழில் நுட்பவியலாளர்கள் போன்றோரின் பங்களிப்பு வரை வருகிறது.



**செல்லப்பா நவீன காலத்தில் ஈழ-தமிழக பிணைப்பில் ஒரு தனி அத்தியாயம். போர்க்காலத்தின் நினைவுகளோடு பிரிக்கப்பட வியலாதபடி பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு தமிழகக் குரல் அது.**

ஈழத் தமிழர்களின் போர்க் காலப் பாடல்கள் தமிழகத்தை எந்த அளவுக்கு சென்றடைந்தன? பரவலாகின? இந்தக் கேள்வி உண்டு. இப்பொழுது ஈழத் தமிழ் வீடுகளில் அதிகமாகப் பார்க்கப்படும் தொலைக்காட்சி தொடர் நிகழ்ச்சிகளில் ஒன்று “சரிகமப”. அது தமிழக சினிமாத் தொழில்துறையின் நீட்சி. அங்கேஈழத் தமிழர்களின் கண்ணீரும் காயங்களும் சந்தைப்படுத்தப்படுகின்றன என்ற விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் அது ஈழத்தமிழ் இசை ஆளுமைகளை பெருந் தமிழ்ப் பரப்பை நோக்கி விரிக்கின்றது. அது மிக அவசியம். பெருந்தமிழ்ப் பரப்பை நோக்கி ஈழத்தமிழ் கதைகளைக் கொண்டு போக வேண்டும் “டூரிஸ்ட் ஃபேமிலி”, “நீளிரா”ஆகிய படங்களைப் போல.

இவ்வாறு சரிகமப மேடையில் சில ஆண்டுகளுக்கு முன் ஈழத்து இசையமைப்பாளர் கண்ணனின் பேத்தி பாடினார். அவர் மேலெழுந்தகாலகட்டத்தில் ஒரு நிகழ்ச்சியில் அவருடைய பெற்றோரை மேடைக்கு அழைத்தார்கள். அங்கேகண்ணனின் மகள் சொன்னார், என்னுடைய அப்பா ஈழத்தில் ஒரு “லெஜண்ட்” என்று. உண்மை. ஈழப் போர்ப் பாடல்களைப் பொறுத்தவரை கண்ணன் மாஸ்டர் ஒரு லெஜண்ட்தான். ஆனாலும் சரிகமப மேடையில் இருந்த நடுவர்களில் எத்தனை பேருக்கு அவரைத் தெரிந்திருந்தது?

ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் எந்தளவுக்கு தமிழகத்தின் வெகு சனப் பரப்பைச் சென்றடைந்திருந்தன? தமிழகத்தின் சினிமா இசைப் பிரம்மாண்டத்தின் முன் ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் ஜனவசியம் குறைந்தவையா?

ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவை பரவலாகக் கொண்டாடப்பட்டன. தாயகத்தை விட்டுப் பிரிந்த ஏக்கத்தோடு தவித்த முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகளின் திரும்பக் கிடைக்காத இறந்த காலம் ஒன்றின் மங்காத நினைவுகளை போர்ப் பாடல்கள் இரைமீட்டன. இதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் செல்லப்பாவைக் கொண்டாடினார்கள் போஷித்தார்கள் .

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய சுந்தரராமசாமி புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில்தான் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களைக் கேட்டிருக்கிறார். அந்தப் பாடல்களை அவர் பாராட்டிஎழுதியிருக்கிறார்.

இலங்கையில் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களில் பலவற்றுக்குச் சட்டரீதியான தடை உண்டு. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அந்தப் பாடல்கள் பரவலாகக் கேட்கப்படுகின்றன. இசைக்கப்படுகின்றன. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் நீண்ட பெருஞ் சாலைகளில், நீண்ட தூரப் பயணங்களில் அந்தப் பாடல்கள் ஒலிப்பதுண்டு. 2009 க்குப்பின் சீமானின் “நாம் தமிழர் கட்சி” யும் தமிழகத்தில் அந்தப் பாடல்களைக் கொண்டு செல்கிறது. அண்மைஆண்டுகளில் தாயகத்திலும் இசை மேடைகளில் சில பாடல்களைக் கேட்க முடிகிறது.

ஈழத்துப் போர்க் காலப் பாடல்களின் முன்னோடிகளில் ஒருவராக செல்லப்பா காணப்படுகிறார். அவர் பெருமளவுக்கு மாற்று நீரோட்ட இசைப் பாரம்பரியத்துக்கு ஊடாக வந்தவர். சி.பா. ஆதித்தனாருடன் இணைத்து தமிழின உரிமைப் பாடல்களைப் பாடியவர். லாப நோக்கமுடைய வெகுசன சினிமா இசைப் பாரம்பரியத்திலிருந்து வந்தவரல்ல. அதனால்தான் அவர் ஈழப் போருக்கு நெருக்கமாக வந்தார். ஈழப் போராட்டம் பாடல்களைத் தயாரிக்கத் தொடங்கியபோது அதன் முதற் குரல்களில் ஒருவராக செல்லப்பாவும் இணைந்தார்.

ஈழத்துப் போர்க்கால பாடல்களில் காசி-செல்லப்பா இசைச் சோடி தனித்துவமானது. முக்கியமானது. காசி ஆனந்தனின் பாடல் வரிகளை செல்லப்பாவின் இசையும் குரலும் சேர்ந்து தூக்கின. பின்னர் புதுவை-கண்ணன் என்று மற்றொரு இசைச் சோடி தோன்றியது. ஈழத்துப் போர்க் காலப் பாடல்கள் ஒரு கட்டத்தில் செல்லப்பாவைக் கடந்துபுதிய இசையமைப்பாளர்களையும் புதிய பாடகர்களையும் உற்பத்தி செய்தன. ஆனால் நெருக்கடியான ஒரு தொடக்க காலகட்டத்தில் கேட்ட குரல் என்ற காரணத்தால் செல்லப்பாவின் குரல் ஈழத்தமிழர்களின் நினைவுகளுக்கு அன்னியோன்யமாகி விட்டது.

வணிக நோக்கிலான சோடினைகள் இல்லாத, கிராமத்து எளிமையும் அப்பாவித்தனமும் தொன்மையும் கலந்த அடர்த்தியான குரல். சிக்கலான இசைக்கருவிகளை பயன்படுத்தாமல் மிகக் குறைந்த இசைக்கருவிகளோடு உருவாக்கப்பட்ட எளிமையான பாடல்கள். இவைதான் செல்லப்பா.

செல்லப்பா நவீன காலத்தில் ஈழ-தமிழக பிணைப்பில் ஒரு தனி அத்தியாயம். போர்க்காலத்தின் நினைவுகளோடு பிரிக்கப்பட வியலாதபடி பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு தமிழகக் குரல் அது.

---

## தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சிக்கு வாய்ப்பு:

## தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பில் தகவல்!

## புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணி முந்துகிறது!!

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிந்தையகருத்துக் கணிப்புகளில் தமிழகத்தில் பெரும்பாலும் திமுக ஆட்சியைத் தக்கவைக்கும். புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) ஆட்சிதொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவுகடந்த ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற்றது. ஆளும் கட்சியான திமுக, பிரதான எதிர்க் கட்சியான அதிமுக, முதல் முறையாகத் தேர்தலைச் சந்திக்கும் விஜய்யின் தவெக மற்றும் சீமானின் நாதக என 4 முனைப் போட்டி நிலவியது .

இதில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் திமுக 164, காங்கிரஸ் 28, தேமுதிக 10, விசிக 8, மார்க்சிஸ்ட் 5, இந்தியகம்யூனிஸ்ட் 5, மதிமுக 4, ஐயூஎம்எல் 2, கொமதேக 2, மமக 2, மஜக, முக்குலத்தோர் புலிப்படை, எஸ்டிபிஐ,தமிழர் தேசம் கட்சி தலா ஒருதொகுதியில் களம் கண்டன.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அதிமுக 166, பாஜக 26, பாமக 18, அமமுக 11, தமாகா 5, ஐஜேகே 2, புரட்சி பாரதம், புதிய நீதிக் கட்சி, சிங்கத் தமிழர் முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில பகுஜன் சமாஜ், தென்னிந்திய பார்வர்டு பிளாக், தமமுக தலா ஒரு தொகுதியில் போட்டியிட்டன. சசிகலா - ராமதாஸ் கூட்டணியில் அகில இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் (சசிகலா) - 71, அய்யாபாட்டாளிமக்கள் கட்சி (ராமதாஸ்) - 38, பசும்பொன் மக்கள் தேசம் - 2, வேளாளர் முன்னேற்றக் கழகம் - 1, இதரக் கட்சிகள் 8 இடங்களில் போட்டியிட்டன.

முதல் முறையாகதேர்தலைச் சந்தித்தநடிகர் விஜய்யின் தவெக 233 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. சேலம் மாவட்டம் எடப்பாடிதொகுதியில் மட்டும் ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்துகளம் கண்டுள்ளது. தமிழக வாழ்வுரிமை கட்சி (வேல்முருகன்) 170 தொகுதிகள், புதிய தமிழகம் (கிருஷ்ணசாமி) 70 தொகுதிகள், பகுஜன் சமாஜ் கட்சி118 இடங்களில் போட்டியிட்டன.

இந்நிலையில் 234 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 62 மையங்களில் நாளை4-ம் தேதிகாலை 8 மணிக்கு தொடங்குகிறது. நாளை பிற்பகலுக்குள் யார் ஆட்சியில் அமர்வார் என்பதற்கான முடிவுகள் தெரியவரும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை பல்வேறு நிறுவனங்களின் கணிப்பில் பெரும்பாலும் திமுக ஆட்சியைத் தொடரும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாணக்கியா ஸ்ட்ராடஜிஸ், என்டிடிவி, ரிபப்ளிக் டிவிகருத்துக் கணிப்பின்படி திமுக தலைமையிலான கூட்டணிபெரும்பான்மை இடங்களைப் பெறும் எனவும், டைம்ஸ் நவ், சிஎன்என் கணிப்பில் அதிமுக ஆட்சியைப் பிடிக்கும் எனவும், இந்தியா டுடே முடிவுகளில் தவெக முன்னிலை வகிக்கும் என்றும், காமாக்யாகணிப்பில் தொங்குசட்டப்பேரவைக்கானவாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

புதுச்சேரி நிலவரம்: புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 30 தொகுதிகள் உள்ளன. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ் 16, பாஜக 10, அதிமுக 2, லஜக 2 இடங்களில் போட்டியிட்டன. இண்டியா கூட்டணியில் காங்கிரஸ் 16, திமுக 13, விடுதலைச் சிறுத்தைகள் ஒரு இடம் என போட்டியிட்டன. ஒருமித்த கருத்து இல்லாததால் இண்டியா கூட்டணியில் இடம் பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் ஒரு தொகுதியிலும், மார்க்சிஸ்ட் 2 தொகுதிகளிலும் தனியாகபோட்டியிட்டன. திமுக போட்டியிடும் 5 தொகுதிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒரு தொகுதி என 6 இடங்களில் காங்கிரஸ் போட்டி வேட்பாளர்கள் கை சின்னத்திலேயேகளம் இறங்கினர்.

அதேபோல், விஜய்யின் தவெக புதுச்சேரியில் நேயம் மக்கள் கழகத்துடன் கூட்டணி அமைத்துள்ளது. தவெக 28 இடங்களிலும், நேயம் மக்கள் கழகம் 2 இடங்களிலும் போட்டியிட்டன. நாம் தமிழர் கட்சி புதுச்சேரி, காரைக்காலில் 28 தொகுதிகளில் போட்டியிடுகிறது. மாஹே, ஏனாமில் போட்டியிடுவதை இம்முறையும் புறக்கணித்தது.

புதுச்சேரியிலும் வாக்கு எண்ணிக்கைநாளை 4-ம் தேதி நடைபெறவுள்ளது. கடந்த வியாழனன்று வெளியான தேர்தலுக்குப் பிந்தையகருத்துக் கணிப்புகள் அனைத்தும் என்டிஏ கூட்டணிஆட்சியைத் தக்கவைக்கும் என்று தெரிவித்துள்ளன. எனினும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் யார் ஆட்சியை பிடிப்பார் என்ற முழு நிலவரம் நாளைதெரிய வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனடா 'தமிழர் தகவல்' சஞ்சிகை 35வது ஆண்டு விருது விழாவும் மலர் வெளியீடும்

1991ம் ஆண்டிலிருந்து கனடாவில் மாதாந்தம் அறாத்தொடராக வெளிவந்துகொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 35வது ஆண்டு விருது விழாவும் 'இளமுதிர்ச் சுவடு' மலர் வெளியீடும் ரொறன்ரோ நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மலர் வெளியீடு நிகழ்வுக்கு தகவலின் உதவி ஆசிரியர் அனோஜினி குமரதாசனும் விருது-கள் வழங்கும் நிகழ்வுக்கு நகர சபை உறுப்பினர் நீதன் சண்ணும் தலைமை தாங்கினர். பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் முதன்மை உரை ஆற்றினார். ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா செள பிரதம விருந்தினராக பங்கேற்று விருதுகளை வழங்கி மாண்பேற்றினார். விழாவில் வழங்கப்பட்ட எட்டு விருதுகளின் விபரம் வருமாறு: வாழ்நாள் சாத - னையாளர் விருது - மருத்துவ பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை (உலக சத்திரசிகிச்சை நிபுணர்கள் சங்க தலைவர்). தமிழர்களின் மனித உரிமைகளுக்கான தார்மிக தற்சாட்சிய சிறப்பு விருது - திரு. றோய் இரத்தினவேல். தொடர் சமூகப் பணிக்கான உயர் விருது - திரு. ஆர். ஆர். ராஜ்குமார். கலைப்பாரம் பரிய அடையாள (நடனம்) விருது - திருமதி குமுதினி சிறீகாந்தன். தொழில்வாண்மை விருது - 'மை மெக்கானிக்' நிறுவனம். எழுத்துப் பணிக்கான விருது - திருமதி பவானி தர்மகுலசிங்கம். பன்முக ஆற்றல் சாதனை மாணவர் விருது - செல்வன் அக்ஷே ஜெயபாலசிங்கம். இளம் பாடகர் சாதனை விருது - செல்வன் சபேசன் சுகிர்தராஜா. ஆண்டு மலரின் முதற்பிரதியை வெளியீட்டு முகாமையாளர் சசிகரன் பத்மநாதன் கையளித்து வெளியிட்டு வைத்தார். சர்வதேச ஊடகப் பரப்பில் அறுபது ஆண்டுகளை பூர்த்திசெய்த திரு எஸ். திருச்செல்வம் தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். விழாவின் சில ஒளிப்படங்கள் இங்கு.























Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈராக்கில் நிலைபெறுமா புதிய ஆட்சி: மீண்டும் அமெரிக்க பொம்மை அரசு ?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

வளைகுடாவில் ஈரானும் ஈராக்கும் ஒரு காலத்தில் மோதிக் கொண்டாலும் அமெரிக்காவிற்கு எப்போதுமே சிம்ம சொப்பனமாக இருந்த நாடுகளாகும். தற்போது ஈரான் மீதான போர்



மூலம் ஆட்சி மாற்றத்தினை உருவாக்க முயற்சி செய்கிறது. ஆனாலும் ஈராக்கில் சதாம் வீழ்ச்சியின் பின்னர் அமெரிக்க பொம்மை அரசுகளே ஆட்சியில் இருந்தனர். ஆனால் தற்போது புதிய ஈராக் அரசு அதே நிலைப்பாட்டை தொடருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஈராக்கில் ஜனநாயகம் என்பது சிக்கலானதும், இன்னும் முழுமையான நிலை நிறுத்தப்படாத ஒரு அரசியல் சிக்கலாகும். 2003இல் ஈராக் போரில் சதாம் ஹூசேன் ஆட்சி அகற்றப்பட்டது. அதன்பின் அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள், ஈராக்கில் மேற்குலக சார்பு ஜனநாயக போர்வை கொண்ட அரசை அமைக்க முயன்றன. இன்னமும் முயற்சிக்கின்றன.

தற்போது ஈராக் அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் ஒரு பாராளுமன்ற ஜனநாயக குடியரசு மூலம் ஆட்சி அதிகாரத்தை கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. மக்கள் தேர்தல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, நாட்டின் பிரதமர் ஆட்சி தலைவராக இருப்பார். அதே வேளை ஜனாதிபதி ஒரு முறையான பதவியாக இருக்கிறார்.

ஆயினும் சவால்கள் நிறைந்த ஈராக் நாட்டு அரசியல் பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. மத மற்றும் இன பிரிவினைகள் குறிப்பாக சியா, சுனி, குர்து இடையே இன்னும் தொடர்ந்து வருகிறது. மேலும் ஊழல், அரசியல் குழப்பம், வெளிநாட்டு தலையீடு, பாதுகாப்பு பிரச்சினைகள் ஐஎஸ்ஐஎஸ் போன்ற குழுக்களால் தீவிரவாதம் தொடர்ந்த நிலையில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலும் ஈராக்கில் சில மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. பல பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. மேலும் ஈராக்கிய மக்கள் போராட்டங்கள் மூலம் அரசியல் மாற்றங்களை கேட்கிறார்கள்.

தற்போதைய சர்வதேச அரசியல் சூழலில் ஈராக்கில் ஜனநாயகம் என்பது இன்னமும் நடைமுறையில் இல்லை என்று கூறலாம். ஆனால் அது இன்னும் நிலைத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை அடைய கடுமையாக போராடுகிறது.

**ஈராக் நாடாளுமன்ற அரசியல்:**

2003இன் பின்னர் ஈராக் நாட்டில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல்கள், நாட்டின் அரசியல் அமைப்பில் மிக முக்கியமான நிகழ்வாகும். ஈராக் நாடாளுமன்றம் என அழைக்கப்படுகிறது. இதில் பொதுவாக 329 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த நாடாளுமன்றத்திற்கு மக்கள் நேரடியாக வாக்களித்து உறுப்பினர்களைத் தேர்வு செய்கிறார்கள். தேர்தல் முறையாக சம அளவிலான பிரதிநிதித்துவம் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நாடாளுமன்றத்திற்கு நேரடியாக இன-சமய பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர். ஷியா கட்சிகள் 197 இடங்களுக்கும், சுனி கட்சிகள் 67 இடங்களுக்கும், குர்திஷ் கட்சிகள் 56 இடங்களுக்கும், சிறுபான்மையின துருக்மென், கிறிஸ்தவர்கள், யெசிடிகள் 9 இடங்களுக்கும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**2025 நாடாளுமன்ற தேர்தல்**

ஈராக்கில் கடந்த ஆண்டு நவம்பர் 11, 2025 அன்று நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இது 2003 சதாம் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு நடைபெற்ற ஆறாவது நாடாளுமன்றத் தேர்தலாகும். இந்த தேர்தல் முடிவுகள் சிதறிய நாடாளுமன்றத்தை உருவாக்க வெளிப்படுத்தியது. இறுதியாக தேர்தல் முடிவுகள் ஈராக்கின் இன-சமயக் கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் சிதறிய



நாடாளுமன்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 329 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்களிக்க 2.83 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றனர். இந்த தேர்தலில் பிரதமர் முகம்மட் அல் சுடானி தலைமையிலான கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றி முன்னிலையில் இருந்தது.

ஆனால் எந்தக் கட்சியும் முழு பெரும்பான்மை பெறவில்லை. அதனால் கூட்டணி அரசாங்கம் அமைப்பது அவசியமானது. சுமார் 56 வீத வாக்காளர் பங்கேற்பு பதிவானது. சில பகுதிகளில் அரசியல் விரக்தி காரணமாக பங்கேற்பு குறைவாக இருந்தது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும் முக்தாடா அல் சடார் தலைமையிலான அமைப்பு தேர்தலை புறக்கணித்தது. ஷியா, சுனி, குர்து அரசியல் குழுக்களுக்கிடையே மிகவும் கடுமையான போட்டி தொடர்ந்தது. அத்துடன் ஈரான் மற்றும் அமெரிக்க நாடுகளின் அரசியல் தாக்கம் முக்கியமாக இருந்தது.

தேர்தலுக்குப் பிந்தைய நிலையாக, புதிய அரசு அமைக்க நீண்ட காலம் எடுத்தது. 2025 நவம்பர் தேர்தல் ஈராகின் அரசியல் அமைப்பில் முக்கியமான மாற்றங்களை கொண்டுவந்தாலும், தெளிவான பெரும்பான்மை இல்லாத தால் அரசியல் பேச்சுவார்த்தைகள் நீண்ட காலம் நீடித்தன. பக்தாத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின்படி, வாக்காளர் பங்களிப்பு 56 சதவீதமாக இருந்தது. இது பிராந்திய மற்றும் மத ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டுகிறது. முன்னர் பிரதமராக இருந்த அல்-சுதானி மீண்டும் போட்டியிட்டது ஈராக் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கருதப்பட்டது.

ஈராக்கில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு, புதிய அதிபர் தேர்வாகியுள்ளார். குர்திஸ்தானின் தேசபக்தி ஒன்றிய கட்சியின் நிசார் அமிடி, வெளியுறவு அமைச்சர் புவாட் ஹூசைன் உள்ளிட்டோர் போட்டியிட்டனர். முதல் சுற்றில் நிசார் அமிடி 208 வாக்குகளுடன் முன்னிலை பெற்றார். இரண்டாம் சுற்றிலும் அமிடி 227 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இதனை அடுத்து 15 நாட்களுக்குள் புதிய அதிபர் அமிடி புதிய பிரதமரை தேர்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

குர்திஸ்தான் மக்களை பிரதிநிதுத்துவம் செய்யும் தேசபக்தி ஒன்றியக் கட்சியின் நிசார் அமிடி புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்தத் தேர்தல், ஈராக் தனது அரசியல் ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்பதைச் சோதிக்கும் ஒரு முக்கியமான கட்டமாகப் பார்க்கப்படுகிறது

**ஈராக்கில் ஜனநாயக அரசியல்?**

2003இல் சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு அமெரிக்கத் தலைமையில் ஈராக்கில் மேற்குலக சார்பு ஆட்சி முலாம் பூசப்பட்ட ஜனநாயக அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் மூலம்




தேர்தல் முறைமை உருவாக்கம் செய்யப்பட்டது. பல கட்சி தேர்தல்கள் நடைபெறுகின்றன. மக்கள் தொடர்ந்து வாக்களிக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் அமைதி மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக பல ஆண்டுகளாக உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. 2000களில் இருந்து பல ஆண்டுகள் வன்முறை, குறிப்பாக ஐஎஸ்ஐஎஸ் எழுச்சி காரணமாக ஈராக் நாட்டை பாதித்தது.

இனச் சமுதாய பிரிவுகளான சுனி, ஷியா பிரிவுகள் அரசியலை ஆழமாக பாதிக்கின்றன. ஊழல் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளன. அத்துடன் வெளிநாட்டு செல்வாக்கு தொடர்கிறது. அமெரிக்கா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் அரசியல் தாக்கம் இன்னும் அதிகமாக இருக்கிறது. இதனால் தற்போது ஈராக்கில் ஜனநாயகம் முழுமையான வெற்றி என்றோ முழுமையான தோல்வி என்றோ சொல்ல முடியாது.

இது இன்னும் உருவாகிக் கொண்டிருக்கும், பல தடைகள் நிறைந்த அரசியல் முயற்சியாகும்.

சதாம் ஹூசேன் ஆட்சிக்காலத்தில்

> ஈரான் மீதான போர் மூலம் ஆட்சி மாற்றத்தினை உருவாக்க அமெரிக்க முயற்சி செய்கிறது. அதேபோல் புதிய ஈராக் அரசு பொம்மை அரசாக தொடருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். வளைகுடாவில் ஈரானும் ஈராக்கும் ஒரு காலத்தில் மோதிக் கொண்டாலும் அமெரிக்காவிற்கு எப்போதுமே சிம்ம சொப்பனமாக இருந்த நாடுகளாக இருந்தன

1969 முதல் 2003 வரை ஈராக் பொருளாதாரம் மிகுந்த மாற்றங்களையும் அதே நேரத்தில் வளர்ச்சியையும் சந்தித்தது. இது இரண்டு முக்கிய காலகட்டங்களாகப் பார்க்கப்படுகிறது. ஆரம்ப வளர்ச்சி காலம் மற்றும் பின்னர் தடைகள் - போர் காரணமான வீழ்ச்சி காலம். ஆரம்ப காலமாக 1970களின் இறுதி - 1980களின் தொடக்கம்வரை சதாம் அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றிய பிறகு, எண்ணெய் வருமானம் அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரம் விரைவாக வளர்ந்தமை அறிந்ததே.

**ஈராக் புதிய பிரதமர் தேர்வு**

தற்போது ஈராக் நாட்டின் ஜனாதிபதி நிசார் அமிடி நாட்டின் புதிய பிரதமராக 40 வயதான அலி அல்-சைதி என்பவரை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அவர் 30 நாட்களுக்குள் புதிய அரசை அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவரை ஆதரித்த ஈராக் பாராளுமன்றத்தில் அதிக இடங்கள் கட்சிகளின் கூட்டணிக்கு சுமார் 130 முதல் 140 இடங்கள் உள்ளன.

நாற்பது வயதான அலி அல்-சைதி, தொழிலதிபர் மற்றும் இஸ்லாமிய வங்கியின் தலைவர் ஆவார். முன்பு எந்த அரசியல் பதவியிலும் இருந்ததில்லை. சட்டம் மற்றும் நிதித்துறையில் படித்தவர்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட நூரி அல் மாலிக் மற்றும் தற்போதைய பிரதமர் அல் சுடானி போட்டியிலிருந்து விலகியதால், சமரச வேட்பாளராக அவர் தேர்வு செய்யப்பட்டார்.

ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதலால் ஏற்பட்ட பிராந்திய பதற்றம் அதிகரித்த நிலையில் தற்போது இவர் பதவி ஏற்றுள்ளார். அதேவேளை ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டும் என்ற அமெரிக்க அழுத்தம் அதிகரித்து வருகிறது. அத்துடன் எண்ணெய் வருவாயை அதிகம் சார்ந்துள்ள ஈராக் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவது ஆகியவை அவருக்கு முன் இருக்கும் முக்கிய சவால்கள் ஆகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தந்தை செல்வா நினைவுப் பேருரையில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீலன் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்த பாராளுமன்றத்தின் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

"பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி 1999 டிசம்பர் ஜனாதிபதித் தேர்தலில் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த பிறகு, ஒத்துழைக்க விரும்பாத மனப்பான்மையைக் கொண்டிருந்ததால் இந்த பிரச்சினைகள் மேலும் சிக்கலாகின. இது தேசத்தின் துரதிர்ஷ்டமாகும் ஒரு தேசிய முயற்சியை விடவும் 'எதிர்க்கட்சி அரசியல் கலாசாரம்' மேலோங்கியிருந்ததால், பாராளுமன்ற விவாதத்தின் போதே அரசாங்கம் அந்தச் சட்டமூலத்தைத் திரும்பப் பெறவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.'

**ஒஸ்லோ பிரகடனம்**

"சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஒரு தீர்க்கமான கட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியக சுயநிர்ணய உரிமையை வேண்டுமென்றே கைவிட்டனர் என்ற கருத்தியல் முழுமையான ஒரு மாயையாகும். நோர்வே தலைநகரில் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது உருவான "ஒஸ்லோ பிரகடனம்" என்பதைச் சுற்றியே இந்தக் கட்டுக்கதை நிலவியது.

இந்த அமர்வின் முடிவில், நோர்வே அனுசரணையாளர்களினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், "ஒருங்கிணைந்த இலங்கைக்குள் கூட்டாட்சி கட்டமைப்பின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில், உள்ளக் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் கீழ் ஒரு தீர்வைக் கண்டறிய இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர்" என்று குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், "உள்ளக சுயநிர்ணய் உரிமை" என்பது குறித்து விடுதலை புலிகளின் புரிதல் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. "எமது தாயகத்தில் எமது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், கணிசமான பிராந்திய சுயாட்சி மற்றும் சுயராச்சியத்தை வழங்கக்கூடிய ஒரு அரசியல் கட்டமைப்பைச் சாதகமாகப் பரிசீலிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்".

ஆனால், இந்த நிலைப்பாட்டுடன் ஒரு எச்சரிக்கையும் எப்போதும் இணைந்தே இருந்தது. மிக அழுத்தமாக ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டது. "உள்ளக சுயநிர்ணய உரிமையின் இந்த அம்சம் தடுக்கப்பட்டு மறுக்கப்படுமானால், மற்றும் பிராந்திய சுயநிர்ணயக் கோரிக்கை நிராகரிக்கப்படுமானால், பிரிந்து சென்று ஒரு சுதந்திர அரசை உருவாக்குவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை".

எனவே, விடுதலைப் புலிகள் வெளியக சுயநிர்ணய உரிமை (தனிநாடு) என்ற தெரிவைத் திறந்தே வைத்திருந்தனர். 1970-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 'நாடுகளுக்கிடையிலான நட்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்த சர்வதேச சட்டக் கோட்பாடுகள்' பற்றிய பிரகடனம், 1998 ஆம் ஆண்டு கியூபெக் பிரிவினை வழக்கில் கனடா உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றிலிருந்தே தங்களது நிலைப்பாட்டிற்கான ஆதாரத்தை பெறுவதாக அவர்கள் வாதிட்டனர்.

விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாடு, அவர்கள் முன்மொழிந்த 'இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை"யிலும் அதற்கான விரிவான அதிகார வரம்புகள் குறித்த திட்டத்திலும் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டது: "மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள சேவைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், வரிகள் மற்றும் வரிவிதிப்புகள் உட்பட வருவாய் திரட்டுதல், சட்டம் ஒழுங்கு மற்றும் நிலம் தொடர்பான அதிகாரங்கள் உட்பட வடக்கு-கிழக்கின் நிர்வாகத்திற்கான முழுமையான அதிகாரத்தை இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கொண்டிருக்கும்".

மேலும், "இலங்கை அரசாங்கத்தினால் வடக்கு-கிழக்கிற்கு எனப் பயன்படுத்தப்படும் பிராந்திய நிர்வாகம் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் செயல்பாடுகளும் இதில் உள்ளடங்கும்" என்றும் தெளிவாகக் கூறப்பட்டது.

இது, பெயரளவில் இல்லாவிட்டாலும், நடைமுறையில் ஒரு தனி நாட்டுக்கான வரைபடமாகவே இருந்தது. செல்வநாயகம் அவர்கள் தனது அரசியல் முதிர்ச்சியின் அடிப்படையில் எமது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் சாத்தியமானது எனக் கருதிய தீர்வுக்கு அப்பாற்பட்டதாக இது அமைந்திருந்தது.

**மாகாணசபை குறித்து ஒரு வார்த்தை இல்லை**

தனதுரையில் 1931 டொனமூர் அரசியலமைப்பு, 1848 சோல்பரி அரசியலமைப்பு, 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி -- செல்வா ஒப்பந்தம், 1972 முலாவது குடியரசு அரசியலமைப்பு, 1976 வட்டுக்கோட்டை தீர்மானம், 1981 மாவட்ட சபைகள் சட்டம், 1983 கறுப்பு ஜூலை, 1991 மங்கள முனசிங்க தெரிவுக்குழு, நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் (2002 --2006), 2004 சுனாமி நிவாரணக் கட்டமைப்பு என்று வரிசையாக சகல முயற்சிகளையும் பட்டியலிட்ட பேராசிரியர் பீரிஸ், 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை, அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் மற்றும் மாகாணசபைகள் குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளுமே தோல்வியடைந்த நிலையில், இந்தியாவின் நேரடித் தலையீட்டையடுத்து கொண்டுவரப்பட்ட மாகாணசபைகள் முறைதான் ( கடந்த பத்து வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாவிட்டாலும் கூட) கடந்த 38 வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த சபைகளை அமைப்பதற்காக கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் இன்னமும் அரசியலமைப்பில் இருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் எதிரணி கட்சிகளுடன் சேர்ந்து குரல் கொடுத்து வரும். பேராசிரியர் அது குறித்து யாழ்ப்பாணத்தில் எதையும் குறிப்பிடாமல் விட்டது திட்டமிட்ட ஒரு செயல் என்ற சந்தேம் எழுகிறது.

நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தில் சுமந்திரனின் இல்லத்தில் தமிழரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் பீரிஸ் மாகாணசபை தேர்தல்கள் குறித்து ஆராய்ந்தார்.

அத்துடன். மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் இடையறாது குரல் கொடுத்துவரும் முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜெயசூரியவுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுப்பதற்கான மக்கள் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனையையும் பேராசிரியர் அந்த சந்திப்பில் வலயுறுத்தியதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பெரும்பாலான தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாத காரணத்தினால்தான் அந்த விடயங்கள் குறித்து பேசுவதை திட்டமிட்டு அவர் தவிர்த்திருக்கிறார் போலும். மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் எதிரணி கட்சிகள் கோருவது 2025 உள்ளூராட்சி தேர்தல்களில் சந்தித்ததை விடவும் மோசமான வாக்கு வீழ்ச்சிக்கு தேசிய மக்கள் சக்தி முகங்கொடுக்க வேண்டிவரும் என்ற எதிர்பார்ப்பிலேயே அன்றி மாகாணங்களின் நிருவாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயக அக்கறையில் அல்ல.

பேராசிரியர் நிகழ்த்தப் போகும் தந்தை செல்வா நினைவுப் பேருரை அந்த மண்டபத்திற்குள் மாத்திரமல்ல, வெளியிலும் நீண்ட காலத்துக்கு எதிரொலிக்கும் என்று சுமந்திரன் வரவேற்புரையில் கூறினார். பீரிஸின் உரை வெளியில் எதிரொலிக்கிறதோ இல்லையோ மாகாண சபைகள் தொடர்பிலான அவரின் மௌனம் மாத்திரம் தெளிவாகக் கேட்கிறது.

# காணி உரிமையாளர்கள் தவறிழைத்துவிட்டார்கள்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணங்களை வைத்திருப்பதாக கூறுபவருமான நயினாதீவு விகாராதிபதியை இந்தக் காணிப்பிணக்கின் ஒரு தரப்பாக உள்வாங்கப்படாததன் நோக்கம் என்ன? அவரே கூறிவிட்டார் இப்போது விகாரை அமைந்திருப்பது அதற்குரிய காணியல்ல என்று. உண்மையில் அவரிடமிருப்பதாகக் கூறப்படும் அக்காணி ஆவணங்களைப் பரிசீலனை செய்து விகாரைக்குரிய காணியை இலகுவாக அடையாளங்கண்டுகொண்டு ஏனைய காணிகளை அதன் உரிமையாளர்கள் வழமையான நடைமுறையில் தாங்களாகவே அளந்து எல்லைப்படுத்த அனுமதித்திருக்கலாமல்லவா? இங்கே தவறுகளைத் திருத்துவதற்குப் பதிலாகச் செய்யப்பட்ட தவறுகளைச் சரியாக்கும் முயற்சி அல்லவா மேற்கொள்ளப்படுகிறது? இவ்வாறு சரியானதும் இலகுவானதும் ஆன வழிமுறைகளைக் கைவிட்டுவிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட காணிக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதற்கு முனைபவர்கள் தவறிழைக்கிறார்களா? அல்லது காணி உரிமையாளர்கள் தவறிழைக்கிறார்களா?

அளவிடப்படும் தமது காணிகள் தமக்கே வழங்கப்படும் என்று பொருத்தமான கடிதத் தலைப்பில் உறுதியுரை தரவேண்டும் என அரச அதிகாரிகளை வற்புறுத்தி காணி உரிமையாளர்கள் தவறிழைத்து விட்டனரா? ஆம் தவறிழைத்துவிட்டனர். இன்னொரு நாட்டுத் தலைவருடன் செய்துகொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை, தமிழ் அரசியல் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை இந்த நாட்டின் அரசியல் தலைவர்களே மதிக்காத போது அரசாங்கத்தின் எடுபிடிகளான அரச அதிகாரிகளின் உறுதியுரைக்கு அல்லது கடிதத்துக்கு என்ன மதிப்பு இருந்துவிடப்போகிறது என்பதை அறியாது அவ்வாறான கடிதத்தைக் காணி உரிமையாளர் கேட்டது அவர்களின் தவறுதான். உண்மையில் அவர்கள் அக்கடிதத்தைக் கேட்டது அளவீட்டைக் குழப்புவதற்கல்ல. அது அரச தரப்பு மீதான நம்பிக்கையீனத்தின் உச்ச நிலை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடந்தகால ஆட்சியாளர்களின் ஏமாற்றுக்கள், சமகாலத்திலும் தனியார் காணிகளைக் கையகப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்வது, குறித்த இப்பிரச்சினை தொடர்பாக 'அ' தொடங்கி 'ஃ' வரையிலான அரசாங்கத்தின் அணுகுமுறைகள் எவையும் நம்பிக்கை தராமை போன்றனவே காணி உரிமையாளர்களை அத்தகைய நிலைக்குத் தள்ளியுள்ளன என்பதைப் புரிந்துகொள்வது கடினமான விடயமல்லவே.

மறுபுறத்தில் அவ்வாறானதொரு கடிதத்தை வழங்கும் அதிகாரம் அக்குழுவினர்க்கோ அல்லது அரச அதிகாரிகளுக்கோ கிடையாது. அதுமட்டுமன்றி அவர்கள் அதற்கு எவ்வாறு பொறுப்பெடுக்க முடியும்? அந்த உண்மையை அதிகாரிகள் காணி உரிமையாளருக்கு நேர்மையான முறையில் தெளிவுபடுத்தியிருக்கலாம். அதைவிடுத்து அதிகாரிகள் பிழையான கடிதமொன்றைக் கொடுத்து காணி உரிமையாளரை ஏமாற்ற முனைந்ததுடன், நியாயமற்ற நிபந்தனைகளை விதித்து அளவீட்டைக் குழப்பிவிட்டார்கள் என அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவது எந்த வகையில் நியாயமாகும்? காற்றாடிகளுக்குக் கீழிருந்து கருமமாற்றுபவர்களைவிட காயப்பட்டவர்க்குத்தான் அதன் வலிதெரியும். காணி உரிமையாளர்மீது குற்றஞ்சாட்டும் அரச அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பவானந்தராசா போன்றோர் தங்கள் மனசாட்சியைத் தொட்டுக்கேட்டால் தெரியும் இவ்விடயத்தில் தவறிழைப்போர் யார் என்பது. என்ன செய்வது அவர்களுக்கு மனச்சாட்சி இருந்திருந்தால் இந்தப்பதவிகளுக்கே வந்திருக்க முடியாதே. தற்போது இவ்விடயத்தில் மௌனமாக இருக்கும் முன்னாள் அரச அதிபரும் தற்போதைய ஆளுநருமான நாகலிங்கம் வேதநாயகனுக்கும் இது பொருந்தும்.

காணி உரிமையாளர்கள் கோரியவாறு கடிதமொன்றை வழங்க முடியாமைக்கான காரணம் சம்பந்தபட்டவர்கள் வெவ்வேறு திணைக்களங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பது என்றொரு காரணம் முன்வைக்கப்பட்டு அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. நினைத்தால் நிர்வாகத்தில் மாற்று ஏற்பாடுகளுக்கு வழியிருக்கவே செய்யும். அடிமுடியில்லாத ஒரு கடிதம்மீது மற்றவர்கள் நம்பிக்கை வைக்கவேண்டும் என எதிர்பார்க்கும் அரச அதிபர் அக்கடிதத்தில் முதலில் தான் நம்பிக்கை வைத்து 'அளவீடு செய்யப்படும் காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கே வழங்கப்படும் என்று அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டு உறுதியளித்ததன் அடிப்படையில், இம்மாவட்டத்தின் அனைத்து அரச கருமங்களுக்கான அதிகாரத்தைக் கொண்டவன் என்ற வகையிலும், அக்குழுவின் ஒரு உறுப்பினன் என்றவகையிலும் அதற்கான உறுதியை இத்தால் அளிக்கிறேன்' என மற்றவர்கள் ஒப்பமிட்ட கடிதத்தையும் இணைத்து ஒரு கடிதத்தை தனது கடிதத் தலைப்பில் அரச அதிபர் வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் எழப்போவதில்லை. ஆனால் இங்கு பிரச்சினை கடிதமன்று. பொறுப்புக்கூறலே. இங்கு யாரும் பொறுப்பெடுக்கத் தயாராகவில்லை என்பதுடன் அவ்வாறு பொறுப்பெடுக்க முடியாது என்பதே நிதர்சனமான உண்மை.

'நல்லது செய்யப் பிறந்த நீ தீமையையாவது செய்யாதிரு' என்றொரு வாக்கியம் உண்டு. இவ்விடயத்தில் இவ்வாக்கியம் வலிவடக்கு பிரதேச்சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனுக்குக் கச்சிதமாகப் பொருந்தும். காணி உரிமையாளரின் உரிமைகளை நிலைநாட்டுவதில் மற்றெல்லோரையும்விட சுகிர்தனுக்கே கூடிய பொறுப்பு உள்ளது. யுத்தம் நிறைவடைந்த பின் 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையும் தையிட்டி அமைந்துள்ள வலிவடக்குப் பிரதேச சபையின் தவிசாளராக அவரே இருந்து வருகிறார். அவரது பதவிக்காலத்திலேயே இந்த சட்டவிரோத கட்டுமாணங்கள் இடம்பெற்றுள்ளன. அதனைத் தடுப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் எவை? குறைந்தது உள்ளூராட்சி அதிகாரசபை அதிகாரத்தின்கீழ் அதற்கெதிராக வழக்கொன்றையேனும் அவர் தொடுத்திருந்தாரா? வழக்குத் தொடுக்கவுள்ளதாக காணி உரிமையாளருக்கு வாக்குறுதி அளித்திருந்ததுடன் அது தொடர்பாக ஊடகங்களிலும் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை அவ்வாறு எதுவும் செய்யவில்லை. அதுமட்டுமல்ல அண்மையில்கூட இது தொடர்பாக சபையில் ஒருமனதாக எடுத்த தீர்மானங்களைக்கூட அவர் நடைமுறைப்படுத்த முனையவில்லை. அதற்கு மேலாக இவ்விகாரைக்கு முதலில் அடிக்கல் நட்ட காலத்தில் இவரது கட்சி பெயரளவில் எதிர்க்கட்சியாக இருந்து அதன் நலன்களைப் பெற்றுக் கொண்டு ஆளுங்கட்சியுடன் தேனிலவில் இருந்தது. அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியேனும் அந்நேரத்தில் ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம். ஆனால் எதுவுமே செய்யவில்லை. சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள தவிசாளர் அதைச்செய்யாது விட்டது மட்டுமன்றி அந்நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விழாக்களில் கலந்து கொள்கிறார் எனில் அவர்மீது அம்மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள்? இந்த விடயத்தில் சுகிர்தன் இரட்டை வேடம் போட்டதாக காணி உரிமையாளர்கள் வெளிப்படையாக சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர் என்ன பதிலைச் சொல்லப்போகிறார்?

இவ்விடயத்தில் தமிழ்த் தேசிய முன்னணி தடையாக உள்ளது என்று குற்றஞ்சாட்டுவது எவ்வளவு தூரம் உண்மையானது? உண்மையில் இப்பிரச்சினையை இந்தநிலை வரை முன்னுக்குக் கொண்டுவந்தது அக்கட்சி என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தொடங்கி இன்றுவரை அதற்காகத் தொடர்ச்சியாகக் களத்தில் போராடுங் கட்சி அது மட்டும்தான். அந்த நேரத்தில் நாலு தலைகள் கூடி என்னத்தைப் புடுங்கப் போகிறார்கள் என்று நாம் அனைவரும் அவர்களைப் பார்த்து நையாண்டி செய்து கொண்டிருந்தோம் என்பதுதானே உண்மை. பிரதேச சபைத் தவிசாளர் என்ற வகையில் அவரும், தமிழர்களின் முதன்மைக் கட்சி என்றவகையில் அவர்சார்ந்த கட்சியும் காணி உரிமையாளர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயற்பட்டிருந்தால் அவர் குற்றஞ்சாட்டுவதுபோல அவர்கள் தமிழ்த் தேசிய முன்னணியின் பின்னால் ஓட வேண்டிய தேவை எழுந்திருக்காதே. இவ்விடயத்தில் சுகிர்தன் மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுவதை விடுத்து தன்னையும் தனது கட்சியின் செயற்பாடுகளையும் சுயவிமர்சனம் செய்தால் உண்மையில் யார் தவறிழைத்துள்ளார்கள் என்பதை தெரியவரும்.

உண்மையில் தையிட்டிக் காணிப்பிரச்சினையில் தவறிழைப்பவர்கள் காணிகளின் உரிமையாளர்கள் அல்லர். அரசாங்கங்களும் அவர்கள் கூறுவதைச் செய்யும் அதிகாரிகளும் அரசுக்குச் சார்பாக இருந்துவரும் அரசியல்வாதிகளுமே அத்தவறுகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். அந்தவகையில் இவ்விடயத்தில் குற்றவாளிகள் தீர்ப்பு வழங்க முனைகிறார்கள் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணி புதைகுழி...

இரண்டு மனித என்புக்கூட்டு தொகுதியுடன் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனித புதைகுழியில், 246 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 243 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை புதைகுழிக்குள் காணப்பட்ட சந்தேகத்திற்கு இடமான கறுப்பு நிற மண் அரித்து எடுக்கப்பட்ட நிலையில், தற்போது அவை உலர விடப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதைகுழிக்குள் மரத்திலான பெட்டி போன்ற உருவம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பணிகள் முடிவடைந்த பின்னரே , அது தொடர்பில் உறுதியாகக் கூற முடியும் எனவும் , இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அகழ்வுப் பணிகள் நடைபெறாது எனவும் , 7ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நாளை திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும் என சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (அ)

## மாலைதீவு...

இதனையொட்டி இன்று கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த போக்குவரத்துத் திட்டம் இன்று முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று மாலை மாலைதீவு ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர், கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக வீதி ஊடாக கொழும்புக்கு பிரவேசிக்கவுள்ளார்.

அந்த நேரத்தில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதால், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்க மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

## தையிட்டி விகாரை...

திணைக்களத்திலிருந்து பெற்றுள்ள இலங்கை சிவசேனா தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் அதன் பிரதிகளை யாழ்.அரச அதிபர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார். அதன் பிரதி ஒன்றை அவர் ஈழநாடுவுக்கும் அனுப்பி வைத்தார்.

நில அளவைத் திணைக்களத்தினால் 1971 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த வரைபடத்தில், தையிட்டி கலைவாணி வீதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் எந்தப் பௌத்த விகாரையும் பதிவு செய்யப்படவில்லை என தெரியவந்துள்ளது.

இதனால், தற்போதைய விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலத்தின் வரலாற்று நிலை குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. குறிப்பாக, அந்த நிலம் முன்பே தனியார் அல்லது உள்ளூர் மக்களின் காணியாக இருந்ததா என்ற விவாதம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

இந்த வரைபடம் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நில அளவைத் திணைக்களத்திலிருந்து அதிகாரபூர்வமாக பெறப்பட்டுள்ளது.

தையிட்டி பகுதியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் காணிகள் தங்களுக்குச் சொந்தமானவை எனக் கூறி, அப்பகுதி மக்கள் பல மாதங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். காணிகளை விடுவிக்க வேண்டும், தங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கோரிக்கையாகும்.

இந்த நிலையில், புதிய வரைபடத்தின் வெளிப்பாடு போராட்டத்திற்கு கூடுதல் வலுவாக மாறியுள்ளது.

காணிகளை விடுவிப்பதற்காக அவற்றை அளவீடு செய்வதற்காக இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன.

இதுவரை, "அந்தப் பகுதிக்கான தெளிவான வரைபடம் இருந்தால் பிரச்னையை எளிதில் தீர்க்க முடியும்" என்று ஆளும் தரப்பு வலியுறுத்தி வந்தது. ஆனால், 1971 ஆம் ஆண்டிலேயே அத்தகைய வரைபடம் தயாரிக்கப்பட்டிருந்தது என்பது தற்போது வெளிவந்துள்ளதால், அரசின் முன்கூட்டிய விளக்கங்கள் மீதான நம்பிக்கை கேள்விக்குறியாகியுள்ளது.

மேலும், இந்த வரைபடம் ஏன் இதுவரை பொதுமக்கள் முன் வெளிப்படுத்தப்படவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்த விவகாரம் இனி சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது.

தையிட்டி விகாரை நில விவகாரம் இனி ஒரு சாதாரண நில பிரச்னை அல்ல் இது ஆவணங்கள், உரிமைகள், அரசின் பொறுப்புத்தன்மை ஆகியவற்றை சோதிக்கும் முக்கியமான விடயமாக மாறியுள்ளது.

1971 வரைபடத்தின் வெளிப்பாடு இந்த விவகாரத்தில் உண்மையை வெளிக்கொணரும் ஒரு முக்கியக் கட்டமாக பார்க்கப்படுகிறது. ஆனால், இதன் முழு விளைவுகள் அடுத்தடுத்த நாள்களில் எவ்வாறு உருவாகும் என்பது கவனிக்கத்தக்கதாக உள்ளது. (அ)

## தமிழ்க் கட்சிகளை...

கொண்டுவரும் நோக்கில் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையினால் கடந்த மார்ச் 2 ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 9ஆம் திகதிகளில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு சந்திப்புக்களில் தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்களுக்கு இடையில் பொது இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசியப் பேரவையினால் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் இனப்பிரச்னைக்கான தீர்வாக தமிழர் தரப்பின் நிலைப்பாட்டினைக் கூட்டாக முன்வைப்பதற்கான தீர்வுத் திட்ட வரைவைத் தயாரிப்பதற்கும், அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வதற்கும் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், துறைசார் நிபுணர்கள் 28 பேரடங்கிய ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபை வழிநடத்தல் குழுவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபையின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி தி.விக்னேஸ்வரனால் கடந்த மாதம் 17 ஆம் திகதி அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அதனையடுத்து கடந்த மாதம் 18 ஆம் திகதி சட்டத்தரணிகள் பேரவைக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, "இனப்பிரச்னைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரங்களில் பொது இணக்கப்பாடு எட்டப்படும் வரை நாம் அரசாங்கத்துடன் தனித்துச் செயற்படமாட்டோம் என வாக்குறுதி அளித்திருந்த பின்னணியில், தற்போது தமிழ்த்தேசியப் பேரவையினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை அந்த ஒற்றுமை முயற்சியைக் குழப்பும் வகையில் அமைந்திருக்கிறது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இவ்வாறு தனித்துச் செயற்படும் வேளையில், விரக்தியளிக்கும் வகையில் உங்களது முயற்சியைத் தொடர்வதன் ஊடாக ஆக்கபூர்வமான அல்லது பயனுறுதிமிக்க விளைவுகளை எட்டக்கூடியதாக இருக்குமா என்பதைத் தயவுசெய்து தெளிவுபடுத்துங்கள்" எனக் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் கடந்த மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்படவேண்டிய அடிப்படை அம்சங்கள் தொடர்பில் தமது கட்சிகளுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை அறிவிப்பதற்குக் கூட்டத்தில் பங்கேற்ற கட்சிகளின் பிரதிநிதிகள் உடன்பட்டிருந்ததன் அடிப்படையில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கான சந்திப்பை எதிர்வரும் புதன்கிழமை கொழும்பில் நடத்துவதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவை உத்தேசித்துள்ளது.

இது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் வினவியபோது, புதன்கிழமை நடத்தப்படவிருக்கும் சந்திப்பில் பங்கேற்பதற்கான சாத்தியப்பாடு குறித்து சட்டத்தரணிகள் பேரவை தன்னிடம் வினவியதாக உறுதிப்படுத்தினார்.

அதுமாத்திரமன்றி கடந்த 18 ஆம் திகதி தமிழ் சட்டத்தரணிகள் பேரவைக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் இன்னமும் பேரவை தெளிவுபடுத்தவில்லை என அவர்களிடம் தான் சுட்டிக்காட்டியதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அவர்கள், தமிழரசுக் கட்சியினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்த விடயம் குறித்து வெகுவிரைவில் பதிலளிப்பதாக உறுதியளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## உயிர்த்த ஞாயிறு...

ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சில குற்றங்கள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், "இந்தச் சம்பவங்களை முழுமையாக விசாரிக்கக் காலம் எடுக்கும். ஆனால், நாங்கள் அதைச் செய்வோம்," என உறுதியளித்தார்.

10 ஊழல் வழக்குகள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்புடைய ஐந்து குற்றவியல் வழக்குகள் உட்பட 15 முக்கிய வழக்குகள் இந்த மாதம் நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## நீதிபதிகள்...

இல்லையா? ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் அனைவரும் நீதிபதிகள் முன்னிலையில் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில் பணி நீக்கப்பட்ட திறைசேரியின் மேலதிக பணிப்பாளர் உயிரிழந்துள்ளார். அது தற்கொலை என்று தற்போது குறிப்பிடப்படுகிறது.

இந்த அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினால் அரச உத்தியோகத்தர்கள் தான் பலியாகிறார்கள். அமைச்சரவை எடுத்த தீர்மானங்களினால் அரச உத்தியோகத்தர்கள் தான் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் தீர்மானம் எடுத்த அமைச்சரவை உறுப்பினர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இந்த மோசடி விவகாரத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பற்றி ஆளும் தரப்பும் பேசுவதில்லை. எதிர்க்கட்சியும் பேசுவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார நிபுணரான ஹர்ஷ டி சில்வாவும் இதைப்பற்றி பேசுவதில்லை.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்களை செலுத்தும் அதிகாரம் இலங்கை மத்திய வங்கியின் வசமே காணப்பட்டது. இந்த காலப்பகுதியில் மத்திய வங்கி ஆளுநரின் அனுமதியுடன் தான் அவுஸ்ரேலிய நிறுவனத்துக்கு கட்டம் கட்டமாக 7 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.

2.5 மில்லியன் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவையும் விசாரிக்க வேண்டும். அவருக்கு மாத்திரம் ஏன் சிறப்பு சலுகை வழங்கப்படுகிறது.

மே தின கூட்டத்தில் அரசாங்கத்தின் வன்மம் வெளிப்பட்டது. ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் அனைவரும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களையும், அரசியல் பிரதிவாதிகளையும் இந்த ஆண்டு சிறைக்கு அனுப்புவதாக குறிப்பிட்டார்கள்.

என்னை சிறைக்கு அனுப்புவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகிறார். ஆனால் நான் இதுவரை எந்த வழக்குக்கும் முன்னிலையாகவில்லை. நீதிபதிகள் முன்னிலையில் சாட்சியமளிக்கவுமில்லை. அவ்வாறான நிலையில் எவ்வாறு பிமல் ரத்நாயக்க தான் தற்போது நீதிபதி அவர் தான் வழக்குகளை விசாரிக்கிறார்.

நீதிமன்றங்கள் வழக்குகளை விசாரித்து நீதிபதிகள் தீர்ப்பளிப்பதற்கு முன்னர் அரசாங்கத்தின் அமைச்சர்கள் தீர்ப்பினை முன்கூட்டியதாகவே குறிப்பிடுகிறார்கள்.இது நீதிமன்ற அவமதிப்பு இல்லையா, ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் அனைவரும் நீதிபதிகள் முன்னிலையில் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டும்-என்றார். (அ)

## பொருளாதார...

கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தனது மீட்சியை தாண்டி நிலையான பேரினப் பொருளாதாரத்தின் அடித்தளத்தின் மீது வேகமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான அபிவிருத்திக் கட்டத்திற்குள் பிரவேசித்து வருகின்றது.

இந்தியாவை நாம் ஒரு போட்டியாளராக பார்க்காமல் முக்கிய பங்காளியாக கருத வேண்டும்.

இரு தரப்பு ஒத்துழைப்பிற்கான வாய்ப்பாக உற்பத்தி மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் எழுச்சி இங்கு அவசியம்.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு இந்தியாவிற்கு தமது ஆதரவைப் பெற்றுத் தருவோம்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல், விநியோகச் சங்கிலி, சுற்றுலா போன்ற துறைகளில் கவனம் செலுத்தி, இலங்கையை இந்தியாவின் உற்பத்தி ஆற்றலுக்கு துணைசெய்யும் கேந்திர ஸ்தானமாக நிலைநிறுத்த வேண்டும்.

இலங்கை அளவு மட்டம் அடிப்படையிலான வளர்ச்சியை தாண்டி உயர் மதிப்புமிக்க, நிலையான அனுபவங்களை நோக்கி பயணிக்க வேண்டும்.

உலகலாவிய ரீதியில் 'மேட் இன் சிறீலங்கா' நாமத்தை மேம்படுத்த வேண்டும்.

திறமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் அனைத்து குடிமக்களுக்கும் பயன் கிட்ட வேண்டும.

நாட்டுக்கு நல்லதைச் சொல்லும், நல்லதைச் செய்யும் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்கு பெறுமானம் சேர்க்கும் கொள்கைகளுக்கு ஆதரவப் பெற்றுக் கொடுத்து வருகின்றது.

நாட்டிற்கு பெறுமானம் சேர்க்காத கொள்கைகளை எதிர்த்து வருவதாக கூறி, இலங்கையின் அடுத்த கட்ட முன்னேற்றத்தில் பங்கேற்க உலக முதலீட்டாளர்கள் நாட்டுக்கு பிரவேசிக்க வேண்டும்-என்றார். (அ)

## பெற்றோல்...

பெற்றோல் 95 ஒக்டேன் (யூரோ 4): ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 470.00 ரூபா ஆகும்.

ஓட்டோ டீசல்: ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 392.00 ரூபா ஆகும்.

சூப்பர் டீசல் (4 ஸ்டார்): ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 458.00 ரூபா ஆகும்.

மண்ணெண்ணெய்: ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 265.00 ரூபா ஆகும்.

இன்று நள்ளிரவு 12.00 மணி முதல் இந்த விலை மாற்றங்கள் நடைமுறைக்கு வரும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.(அ)

## ரஷ்ய சுகாதார...

ரஷ்யாவின் சுகாதார அமைச்சுக்களுக்கு இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந் தத்தை எட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் மிகைல் முரா ஷ்கோ உள்ளிட்ட குழுவினர், மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இன்று இலங்கைக்கு வருகை தர உள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, ரஷ்ய சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவினர், ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுகாதாரத் துறையில் உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவது குறித்து சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் ஒரு சிறப்பு கலந்துரையாடலில் ஈடுபட உள்ளனர்.

மேலும், வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்துடனும் இத்தூதுக்குழுவினர் கலந்துரையாடல் நடத்துவர்.

ரஷ்ய சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் நாளை கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தைப் பார்வையிடவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, ரஷ்ய சுகாதார அமைச்சரும் அவரது குழுவினரும், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மருத்துவ நிபுணர்களின் பயிற்சி மற்றும் கல்விசார் ஒத்துழைப்பு (பரிமாற்றங்கள், பாட நெறிகள் சம்பந்தமான ), ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சுற்றுலா சுகாதார சேவைகள் உள்ளிட்ட சுகாதாரத் துறையின் முக்கியப் பகுதிகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக, சுகாதார சேவையின் ஒவ்வொரு துறையுடனும் கலந்துரையாடல்களையும் கருத்துப் பரிமாற்றங்களையும் நடத்த திட்டமிட்டு உள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# எரிபொருள்களின் விலையில் சிறிய உயர்வு ஏற்படக்கூடும்!

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, மே. 03

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் தற்போதைய சூழ்நிலை காரணமாக இலங்கையில் எரிபொருள் விலையில் சிறிய அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் ஏற்கனவே மக்களுக்கு முடிந்த அளவுக்கு நிவாரணம் வழங்கியிருந்தாலும், ஒரு "சிறிய அதிகரிப்பு" அவசியமாகலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், இந்த விலை திருத்தம் எப்போது அமுல்படுத்தப்படும் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

ஏப்ரல் 30 ஆம் திகதி எதிர்பார்க்கப்பட்ட மாத இறுதி எரிபொருள் விலை திருத்தம் நடைமுறைக்கு வராததை அடுத்து, இந்த கருத்துகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜே.வி.பியின் வரலாறு மீள ஆரம்பமாகிறதா?

### அதிகாரி மரணம் குறித்து முஜிபுர் எம்.பி. சந்தேகம்

கொழும்பு, மே 03

நிதியமைச்சின் அதிகாரி ஒருவரின் மரணம் தொடர்பில் தற்கொலை என அரசாங்கம் கூறுகிறது. ஆனால், இது 1988, 1989 காலப்பகுதிகளில் ஜே.வி.பியினரால் முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டு வன்முறைகளின் தொடர்ச்சியா என்ற பாரிய சந்தேகம் ஏற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மேலும் 2.5 மில்லியன் டொலர் விவகாரத்தில் சிக்கியுள்ள அரசாங்கம், அதிகாரிகளை பலிக்கடாக்களாக்கி தப்பிக்க முயல்வதாகவும், இந்த ஊழல் அரசாங்கத்தை விரட்டியடிக்க வெகுவிரைவில் வீதிப்போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு - மாளிகாவத்தை பீ.டி.சிறிசேன மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த அரசாங்கங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை கண்டு பிடிப்பதாகக் கூறியவர்கள் இன்று திறைசேரி நிதியிலேயே பாரதூரமான மோசடிகளில் ஈடுபட்டு பிடிபட்டுள்ளனர். 2.5 மில்லியன் டொலர் விவகாரம் தொடர்பில் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்ட நிதி அமைச்சின் அதிகாரியொருவர் உயிரிழந்துள்ளார். அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என அரசாங்கம் கூறுகிறது. ஆனால் அவர் 1988, 1989களில் காணப்பட்ட ஜே.வி.பி. வன்முறையாளர்களின் துப்பாக்கி குண்டுகளுக்கு இலக்காகியுள்ளாரா என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகிறது.

அரசாங்கத்தில் இடம்பெறும் சகல ஊழல், மோசடிகளுக்கும் அரச அதிகாரிகள் மீது குற்றஞ்சுமத்திவிட்டு பொறுப்பு கூறவேண்டியவர்கள் தப்பிக்கொள்ள முயற்சிக்கின்றனர். இந்த அரசாங்கம் மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டது. மக்கள் மாத்திரமின்றி தொழிலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் என அனைவரும் அரசாங்கத்திடமிருந்து விலகிச் செல்கின்றனர்- என்றார். (எ)

## சிறுமியைத் தவறான நடத்தைக்கு உட்படுத்தியவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மே. 03

எட்டு வயதுச் சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்திய சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 15 ஆம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அராலி தெற்கு பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி தாய்வழி உறவினரான இளைஞர் ஒருவரால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தவறான நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார்.

இது குறித்து சிறுமியின் தாயார் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த சந்தேகநபரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-05)

### கதிரியக்கப் பொருள் தட்டுப்பாடு

## புற்றுநோயாளர்களின் 'பெற்' ஸ்கான் பாதிப்பு

கொழும்பு, மே. 03

கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் மஹரகம அபேக்ஷா மருத்துவமனைகளில் 'பெற்' ஸ்கான் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், புற்றுநோய் நோயாளிகள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

'பெற்' ஸ்கான் செய்வதற்கு அவசியமான கதிரியக்கப் பொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே இந்தச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்யும் விநியோகஸ்தர்களை பதிவு செய்வதில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு மேற்கொண்ட தாமதம் காரணமாகவே இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, கடந்த மார்ச் 27 முதல் தேவையான பொருள் நாட்டில் கிடைக்கவில்லை.

புற்றுநோய் செல்களை துல்லியமாகக் கண்டறிதல், அவற்றின் செயற்பாட்டை மதிப்பிடுதல், நோய் பரவியுள்ள எல்லையைத் தீர்மானித்தல் மற்றும் சிகிச்சையின் செயற்திறனை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் 'பெற்' ஸ்கான் முக்கிய பங்கு வகிக்கிறது.

இது குறித்து தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் மருத்துவர் ஆனந்த விஜய விக்கிரம தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு முறையான பதிவு இல்லாமலேயே இந்த பொருளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த ஆண்டு முதல் அனைத்து விநியோகஸ்தர்களையும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு பதிவு செய்வதை கட்டாயமாக்கியுள்ளது.

பதிவு செய்வதற்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு நிறுவனங்கள் கோரப்பட்டபோதிலும், அந்த விவரங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதமே தற்போதைய நிலைக்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், தற்போது விநியோகஸ்தர்கள் பதிவு செய்யப்பட்டு, உரிய இரசாயனத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மருத்துவர் விஜயவிக்கிரம தெரிவித்தார். (அ)

## மின்சார கட்டணம் மீண்டும் 11 வீதம் அதிகரிக்க வாய்ப்பு

### ஹர்ஷ டீ சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 03

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதிலும், எதிர்வரும் 10 ஆம் திகதியளவில் மீண்டும் 11 வீதத்தினால் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற ஊழலால் ஏற்பட்ட 18 பில்லியன் ரூபாய் இழப்பை, மக்கள் மீது சுமத்த வேண்டாம் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

எனினும், அரசாங்கம் அதனை மறைமுக வரிகள் மூலம் மக்களிடமே வசூலிக்கத் தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இந்த மாதம் 10 ஆம் திகதியளவில் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் 11 வீதம் வரை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், உணவு, மருந்து மற்றும் விவசாய உபகரணங்களுக்கான வற் வரியை நீக்குவதாகக் கூறிவிட்டு, நடைமுறையில் சமூகப் பாதுகாப்பு வரியுடன் சேர்த்து சுமார் 22 வீதம் வரை வரி வசூலிக்கப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

## மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபட்ட 22 இளைஞர்கள் கைது!

கொழும்பு, மே. 03

மாலபே - சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்துக்கு அருகில், பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள் சாகசங்களில் ஈடுபட்ட 22 இளைஞர்களை கடுவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகனச் சாரதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இளைஞர் குழுவொன்று மோட்டார் சைக்கிள் சாகசங்களை நடத்துவதாக கடுவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இளைஞர்கள் வாட்ஸ்அப் குழுவொன்றின் ஊடாக ஒன்றிணைந்து இந்த சாகச நிகழ்வைத் திட்டமிட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களில், இலங்கையில் பதிவு செய்யப்படாத இரண்டு மோட்டார் சைக்கிள்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட 22 இளைஞர்களும் கடுவெல பகுதிக்கு வெளியே வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## இறைவரி திணைக்கள தீ விபத்து குறித்து விசாரணைகள் ஆரம்பம்

களுத்துறை, மே 03

களுத்துறை பிரதேச உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தினால் வரி தொடர்பான தரவுத் தொகுதிகளுக்கோ அல்லது திணைக்களத்தின் செயல்பாடுகளுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ருக் தேவி பெர்னாண்டோ தெரிவித்தார். அலுவலகத்தின் பணிகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், தொலைதூர அணுகல் மூலம் முறைமைகளை மீண்டும் இணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org